558.

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.

V7. No.29. 26.7.1934.

M211,N22KN
N34.7.29
199179

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ௵ ஜூலை ௴ 26௳ [No. 29

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 449
2. தமிழ்ப் பாடம்—
நைடதம்—நளன் தூதுப் படலம். 451
3. காலம்.
வித்வான் K. S. விசுவநாதசாஸ்திரி P.O.L. 453
4. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 8-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B. A. B.L. 454
5. மதுரைக்கோவை—
(வினைமேற் பிரிவு, உற்றுழிப் பிரிவு)
S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 456
6. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 4, களம் 1)
Goldsmith's—"She stoops to Conquer" 457
7. பயனின் பயன் (சிறு கதை)
K. S. முத்துராமலிங்கம் M. A. 459
8. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L 460
9. அப்பர் (64 கலை-இதிகாசம்-இராமன் சரிதை)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 462
10. வர்த்தமானம் 464

## கலாநிலயம்

### கல்சரை யடையும் வகை 6

கல்சர்நிலை எய்துதற்கு இணையிலாத் துணையாய் உடனின்றுதவுவன மேலோரருளிய நூல்கள். இதனை உரைக்கவந்தநா மிதுகாறும், கண்டதைப்படிப்பதெல்லாம் கல்வியாகாதென்ன விலக்கிக்காட்ட முயலலுற்றோம். தொன்மையொடு தூய்மையும் தங்கியுள சான்றோர் நவின்றநூல்களே பயின்றுவருவதற்குரியன. இவையன்றி யாதொன்றுங்கல்விநலமில்லாதார்தம் மடமையில்முதிர்ந்து வெளிவரும் நாவல்களும் கட்டுரைகளும், இவையனைய கணக்கில் பல்வகைப் புத்தகங்களும் பாடல்களும் பண்பில பயனுமில. கையோயாம லிவைகளை யெழுதுவோர் தம்மை ஆசிரிய ரென்றும், படிப்போர் தம்மைக் கல்வியாளரென்றுங் கருதிக்கொளல் பெரிது மிரங்கத்தக்கதே. இதனைச் சிறிதறிவுடையோரும் எளிதி லுணர்ந்திருக்கின்றனர்.

வர்த்தமானப்பத்திரிகைகளும் நம் கலாசாலைகளும் கல்விநலம் கலந்தவைக ளென்னுமோர் எண்ணம் எங்குங் குடிகொண்டிருக்கின்றது. கல்சருக் கோர் கைத்துணையாய் அமைந்துநிற்பதே கல்வியின் இலக்கணமாதலால், இப்பத்திரிகைகள் பெரும்பாலும் கல்சருக்கு எதிராய் எத்திறத்திலும் இயங்கிவருதல்பற்றி அவை கையாளுதற்குரியன வல்லவென்று தெருட்டவேண்டியவரானோம். ஏனெனிற் பற்பலர் வர்த்தமானப்பத்திரிகைகளைப் படிக்கின்ற திறமையைப் பெற்றதோடு கல்விமுற்றிய கனவான்க ளாகிவிட்டதாக மதிக்கலானனர். இப்பொழுது "கிராம புனருத்தாரணம்" என்ற ஒரு சொற்றொடர் எல்லோர் நாவிலும் நடமாடிக்கொண்டிருக்கின்றது. அதன்படி, கிராமந்தோறும் வாசகசாலைகள் அமைத்து வர்த்தமானப் பத்திரிகைகள் பலப்பல வரவழைத்துக் கிராமவாசிகள் அதனை விடாமல்படித்திருக்கப் பழக்கப்பெறுவாராயின் 'புனருத்தாரண' வேலையின் பெரும்பகுதி செய்யலாயிற்றென்று எங்கெங்கும் சொல்லக்கேட்கின்றோம். இம்முயற்சி நல்லவோர் எண்ணத்தால் தூண்டப்படுகின்றதேனும், முறையின் நன்மை முழுவதும் அயிர்த்தற்கிலக்கானதே என்பது நாமிதுகாறும் வகுத்துரைத்தவைகளால் விளங்குதல்வேண்டும். வர்த்தமானப்பத்திரிகைகளைத் தம் வாழ்நாள்முழுதும் யாசித்துவருகின்றவர்களில் எத்தனைபேர், பொறை அறிவு ஈகை வாய்மை முதலிய நற்குணங்களோடு மனிதர் இருக்கவேண்டியபடி இருக்கின்றனர் என்பதை எண்ணிப் பார்த்தபின் ஏதும் இயம்புவது—நலம். கிராமத்தில் வசிப்பவர்களுள் சிற்சிலரேனும் இன்றைக்கும் பொய்வாழ்க்கை வாய்ப்பட்டுழலாமல் தம் இயற்கை நற்குணங்களோடு நன்கு வாழ்கின்றனர். அன்னவர்வந்து நமதுநகரங்களைப் 'புனருத்தாரணம்' செய்திட அருளுவாராயின் அதுவே முறையென இயம்புதல் வேண்டும். இதனால் நம்மிடை இந்நாள் இருக்கின்ற தீமைகளுக்கெல்லாங் காரணம் வர்த்தமானப் பத்திரிகைகளே என்று விளம்பும் கருத்துடையேம் என்று எண்ணவேண்டா. உயிரிற்கு உரிய உண்மையாய நன்மையொன்றும் அவை நடத்திவைப்பதில்லை என்பதோடு, வேறெக்காரணத்தினாலேனும் விளைந்ததீமைகளைப் பரவச்செய்கின்றன

வென்பதும் நாம் அவைகளின்பால்காண்கின்றகுறை. மனிதர்தம்அமைப்பில், பண்டிருந்து தொடர்ந்துவருகின்ற மிருகத்தன்மையும், மேனுள் இனி எய்தவேண்டிய திப்பியநோக்கமும், ஆகிய இரண்டும், ஒவ்வோரளவு கலந்திருக்கின்றன. இவைகளில், மனிதனுக்குள்ளிருக்கும் மிருகத்துடன் உறவாடி அதனையே ஊட்டி வளர்த்துக் கொழுக்கச் செய்வதெல்லாம் கல்சருக்கு விரோதமானவை. கொழுத்துத்திரியும் இவ்விலங்கு, தன்னொடுபிறந்தும் வளர்ப்பாரின்றி இளைத்திருக்கும் தெய்வசிந்தனை தருமசிந்தனை முதலாய அம்சங்களை அடித்துத் தின்றுவிடுகின்றது. இல்லையெனில், ஒருநாளல்லாக்கால் ஒருநாள் இக் கல்சரம்சங்கள் தாமே தம் இயற்கைச் சாதனங்களைக்கொண்டு தலையெடுத்து விலங்கினைத் தன்வயமாக்கி நடத்தினும் நடத்தலாகலாம். ஆதலின், கல்சரினது மெய்ந்நிலையை உணர்ந்து அதன் வளர்ச்சிக்குரியவற்றை முயன்று செய்யாராயினும் ஆகுக! விலங்கையேனும் கொழுக்கவைக்காமல் இருத்தலே பேருதவியாகின்றது.

ஆரம்பமுதல் அந்தம்வரையினும் நம்மைப்பற்றித் தொடர்கின்ற இந்தப்பேர்போனபாடசாலைகளும் கல்லூரிகளும் சர்வகலாசாலைகளும் மாந்தரதுமெய்வாழ்விற்கு விரோதமாகவே இருக்கின்றன. "நம்முடைய" என்றதினுல், இந்தநாட்டின் கல்விமுறைகளில் உள்ள குறைகளையே கருத்திற்கொண்டு இதனை இயம்புகின்றோமென் றெண்ணலாகாது. இக்காலம் உலகெங்கும் நடைபெற்றுவருகின்ற கலாசாலைகள் யாவற்றையும் உள்ளடக்கியே இது உரைக்கின்றோம். இவைகளால் தீதொழிய நலமென்றிருக்கும்பாகம் நினைப்பதற்கும் பற்றாது. ஆதலின், படித்தவர் படிக்காதவர் தொகைகளின் மிகுதி குறை காட்டிக் காட்டிப் பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் நிறுவ முயல்வதெல்லாம் நல்வாழ்வுவளருமாறு அமைந்த நந்தனவனங்களல்ல— கல்சரை வதைத்தொழிக்குங் கொலைக்களங்களேயாம் அவை. இவ்வுரை, துண்ணெனஎழும்பும் வியப்பைத் தூண்டலாம்; எனினும் உண்மையே. சிற்சிலபோது, உண்மையே பொய்யினும் வியக்கற்பால தாகின்றது.

இது உண்மையே என்றுணர்வதற்கு முதலிலேயே ஒன்று மறவாதிருந்தால் போதுமே. எதனைக் கருதி இப்பாடசாலைகளைத் தேடி அடைகின்றனர்? நாவின் நுனியிலிருந்து வழிகின்ற வார்த்தைகள் சில, கல்வியும் அதனுல்வரும் குணம் ஒழுக்கம் அறிவு முதலியவைகளையும் பெறுவதற்கென்று பகரலாம். எனினும் அவையனைத்தும்வம்பே. தம் வயிற்றிற்குவழிதேடியே ஆசிரியர் மாணவர் இருதிறத்தோரும் பெரும்பாலும் பாடசாலைகளுக்குள் நுழைகின்றனர். ஓதும் பாடத்திற்கெல்லாம் பயன் பணத்திலேயே காணவேண்டும் எனின் வேறு பல விளம்புவானேன். நம் கலாசாலைகளில் கற்றுத் தேர்ந்து பட்டமும் பெற்றனராய் உத்தியோகங்களிலும் உயர்தரத் தொழில்களிலும் ஊடாடுவாரை உற்றுநோக்கினுல், நயமாயிருக்கின்ற அவரது நடையுடைபாவனைகளுக்குள், பொய்யும்வஞ்சனையும் உலோபமும் பொறாமையும் வன்னெஞ்சும் பொல்லா ஒழுக்கங்களும், இலஞ்சமும் துரோகமும், சுயநயப்பேயின் ஒரு தலைவிரிகோலமும், மதுவும் விபசாரமும் குதிரைப் பந்தயமும் எல்லாம் இருக்கக் காணலாம். இத்தனையும் கல்சர் இல்லாதார் குணங்கள். இன்னவர்களைக்காணுமிடத்துக் கல்லாதபேர்களே நனி நல்லவர்கள், நல்லவர்கள்! இன்னுர் வீண்காலம் கழிக்கின்ற விதங்களைக் காணவும், பயனிலாப் பேச்சுக்களைக்கேட்கவும், பேயும்பின்னிட இவர் நாணமும் மானமுமின்றிப் புரிகின்ற பற்பல செயல்களை நினைக்கவும், சான்றோர் பலர் இவ்வுலகநிலைக்கு இரங்கி நெடிதுயிர்த்துக் கண்ணீர் வடிப்பார். தம் வாய்கொள வெறுத்துரைப்பார் சிலர். தன்னுடைய கருத்தைத் தட்டின்றி வன்மையோடுரைக்கும் வழக்கம்வாய்ந்த ஆங்கிலஅறிஞர் பர்னுர்ட் ஷா என்பவர், இங்கிலாந்து நற்கதி அடையவேண்டுமாயின் உடனே ஆக்ஸ்பர்ட் கேம்ப்ரிட்ஜ்முதலிய இடங்களிலுள்ள கலாசாலைகளை இடித்துத் தரைமட்டமாக்க வேண்டுவ தவசியமென்று உறுதியாகச் சில ஆண்டுகளுக்குமுன் விளம்பினுரெனத் தெரிகின்றது. வேறெதற்குமல்லாவிடினும் இவ்வாசகத்திற்காக அவரை நல்லறிவுடைய மேலோர் அனைவரும் முழுமனதோடு வாழ்த்துவார் என்பது திண்ணம். ஆக்ஸ்பர்டையும் கேம்பிரிட்ஜையும் பார்த்துப்பார்த்து இங்கிருப்பவர் சர்வகலாசாலைகள் அமைக்க முயல்கையில் அங்கிருப்பவர் ஒருவர் அவைகளை இடித்தலே கருமமென்பதனினும் கூரிய வசை, பொய்க்கல்வி போதிக்கவே பலவாறு முயல்வார்க்கு வேறுவேண்டுமோ!

இவ்வண்ண நாம்இங்குக் கலாசாலைகள் கொடியன என்று பேசுமிம் முறையானது மிகுதிபற்றிநிகழ்கின்றதென்பது வெளிப்படை. இக் கலாசாலைகளில் போதிக்கின்றவர்களிலும் படித்துத்தேறி வெளிவருகின்றவர்களிலும் ஆயிரத்தி லொருவரேனும் நல்லவர்களாயிருக்கலாமென்பது மறுக்கற்பாலதன்று. ஆயினும், தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றென்பதின்மரைக் கெடுக்கின்ற பொறுப்பு இந்தக் கலாசாலைகளைச் சார்ந்திருக்கின்றதேயன்றி, நல்லவரா யிவ்வொருவர் இருக்கின்ற பெருமைக்கோ அவை ஒருபோதும் பாத்திரமாகா. கலாசாலைகள் செய்யும் இடையூறுகளையெல்லாங்கடந்து ஒருவர் கல்சர் அடைந்தாரெனின் அவர் புரிந்துளபாக்கியம் பெரியதா யிருத்தல்வேண்டும். பெற்றோரின் நற்குணமோ, அவர்வளர்ந்த குலத்தின் மரபோ, அல்லது, ஒரோவழி அவர்தம் ஆசிரியர்களுள் யாரேனும் ஒருவரது உண்மையறிவோ, இந்நன்மைக்குக் காரணமாயிருக்கலாமேயன்றி, கலாசாலையேனும், அதனில் கற்பிக்கும் பாடங்களேனும், அவைகளைக் கற்பிக்கும் முறைகளேனும், அங்கிருந்து உடன்பயில்வோர் உறவேனும், மற்றக் கல்வியைப்பற்றிப் புறத்தே நடமாடும் நோக்கங்களேனும் ஒருபோதும் அவரது இயற்கையம்சங்களாகிய தெய்வபக்தி தருமசிந்தனை பகுத்தறிவு என்னும் இவைகள்வளர்வதற்குரிய துணைகளோ ஆகா. கலாசாலைகளில், அரைக்கால் கால் அரை முக்கால் முழுப்படிப்புப் பெற்றிருப்பவர்களோடு, சீமைக்குச் சென்று தம்முடைய படிப்பிற்கு மெருகு இட்டுக்கொண்டு வந்திருப்பவர்களையும் ஒன்று

199179
M211,N28KN
N34.7.29



சேர்த்து ஒருபுறமும், இன்னவர்களோடு, அதிகம் கல்லாமலும் இப்பள்ளிக்கூடப்படிப்புக் கொள்ளாமலும் இருக்கின்ற கிராமவாசிகளை மறுபுறத்தும் வைத்துச் சீர்தூக்கிப் பார்த்தால், முன்னவர்களைவிட இப்பின்னவர்கள் ஆளுக்குஆள், கருணை அன்பு ஈகை தெய்வபக்தி தருமத்திற்கஞ்சிநடத்தல் மானம் முதலிய குணங்களால் மேன்மையுற்றிருப்பதுமல்லாமல் முழுமைக் கணக்கில் இவர்களுடைய வாழ்க்கைமுறையும் சூடும் பச்சிறப்பும் எல்லாப்படியாலும் ஐயமின்றி உயர்ந்திருக்கின்றனவென்பதை மறுக்க முன்வருவாரிலர். இவ்வாறுஇருப்பதன் காரணங்கள் கண்ணுடையோர்க்கெலாம் மலையிலக்காய் நிற்கின்றன. ஆதலின், சர்வகலாசாலைப் பட்டம் பெற்றவர்களிலும் இரண்டொருவர் உயர்ந்தகுணமுடையவராயிருக்கக் கண்டு, "கலாசாலைகள் கெடுக்குமென்றுல் இவர்களுமன்றே கெட்டிருத்தல் வேண்டுமென ஐயப்பா டடையவேண்டா. இவர்களைக் கெடுக்கக் கலாசாலையாலும் இயலவில்லை; அவ்வளவே. கலாசாலைகள் நன்மைசெய்யுமெனில் அதனிற் படித்தவர்களில் ஒருவரும் கெடப்படாதன்றே, என வினவுவதே தர்க்கத்திற்கு ஒத்தமுறை. தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றென்பதுபேரைக் கெடுக்கு மிது, ஒருவனைக் கெடுத்திடாததால், கெடுக்குந்தன்மை இதன்பால் இல்லையென்றும், கெட்டதெல்லாம் கெட்டவர் பிழையேயன்றி இதன்குறை யன்றென்றுங் கருதலாகாது. தேள்கொட்டினுல் ஆயிரத்திலொருவருக்குக் கடுப்பதில்லை. ஆதலின், இவ்வொருவரைக் கொண்டு தேளுக்கு விஷமே யில்லை என்னத்துணிந்து அதனைத் தீண்டுவா ருளரோ!

## தமிழ்ப்பாடம் 129.

### நைடதம்—ளன்தூதுப் படலம்

[437-வது பக்கத் தொடர்ச்சி]

கழைசுளி புகர்முகக் களிநல் யானையா
னிழைசுட ரெறிப்பவந் திறுத்த தேந்திழை
விழவினுக் காயின்யா மீண்டு போதலே
யழகிதென் றந்தக னறைந்திட் டானரோ 11.

(உரை). "கழை - கரும்பை, சுளி-கோபித்து முறிக்கின்றதும், புகர் முகம் - புள்ளிகளையுடைய முகத்தையுடையதும், களி - களிப்புடையதும் ஆகிய, நல் - நல்ல, யானையான்-யானையை உடைய இவன், இழை - தன்னுடைய ஆபரணங்கள், சுடர் எறிப்ப - ஒளியை வீசும்படி, வந்து இறுத்தது - வந்துதங்கியது, ஏந்து இழை - நிமிர்ந்த ஆபரணங்களை அணிந்த தமயந்தியின், விழவினுக்குஆயின்-சுயம்வரவிழாவின் பொருட்டேயானுல், யாம் - நாம்அனைவரும், மீண்டு போதலே அழகிது-திரும்பிப்போய்விடுவதுதான் தகுதியாகும்," என்று - என்று, அந்தகன்- யமன், அறைந்திட்டான்- சொன்னுன். (அரோ—அசை.)

குறிப்பு:— கழைசுளி - இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலால் வல்லினமெய் மிகவில்லை. சுளிபுகர்- வினைத்தொகையாதலால் வலி மிகவில்லை. ஏந்திழை - வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. மீண்டு போதலே - நிலைமொழி வினையெச்ச மாயினும் ஈற்றில் மென்றொடர்க்குற்றியலுகரம் இருத்தலால் வருமொழி முதல் வல்லினமெய் மிகவில்லை.

---

போர்த்தொழில் வைரவாட் பொருவி லண்ணல்
தார்ப்பசுங் கிளியனு டார்பெ றுதுபோய்க் [செங்
கார்க்குழ லரம்பையர் கமல வாண்முகம்
பார்ப்பதெவ் வாறெனப் பரிவிற் கூறினுன். 12.

(உரை). போர்த் தொழில் - போர்த் தொழிலிற்கு உரிய, வைரம்வாள்-வஜ்ராயுதத்தையுடைய, பொருவு இல் அண்ணல்-தனக்கு நிகரில்லாத சிறப்புவாய்ந்தஇந்திரனுனவன், "செம் தார் - செம்மையான மாலையை அணிந்த, பசும் கிளி அனுள் - பச்சைக்கிளிபோன்ற தமயந்தியின், தார் - சுயம்வரமாலையை, பெறுது - பெற்றிடாமல், போய் - நாம் திரும்பிப்போய், கார்க்குழல் - கருமையாகிய கூந்தலையுடைய, அரம்பையர் - தேவகன்னியர்களுடைய, கமலம் வாள் முகம் - தாமரைபோன்ற ஒளிபொருந்திய முகங்களை, பார்ப்பது எவ்வாறு- எப்படிப் பார்ப்போம்"— என்று - என்று, பரிவில் கூறினுன் - வருத்தத்துடன் கூறினுன்.

விரிவுரை:—"இந்தப் பேரெழில்வேந்தனும் தமயந்தியின்சுயம்வரத்திற்கே செல்வான் ஆனுல், அவனைப் பார்த்தபின் நமக்கு அவள் மாலையிடமாட்டாளென்பதுதிண்ணம். ஆதலின் அங்குச்சென்று நாம் பரிபவமடைவதைக்காட்டிலும் வந்தவழியே திரும்பிப்போவதே நல்லது" என்று யமன் கூறியதைக்கேட்ட இந்திரன், "தமயந்தின் மணமாலையைப் பெறுமல் நாம் இவ்வாறு திரும்பிப்போவோமெனின், ஊர்வசி மேனகை முதலிய தேவகன்னியர்கள், 'யாம் இருக்க எம்மினும் அழகுடைய ஒருத்தியை நாடிச்சென்ற இத்தேவர்தங் கதியைப் பாருங்கள்' என்று பரிகசித்து ஒருவர்க்கொருவர் கட்சாடைபோக்கிக் களிப்பார்களே, அன்னவர்கள் முகத்தைப்பார்க்க நாம் மானம்செத்து எவ்வாறு நிற்பது" என மனஞ் சோர்ந்தனன்.

செந்தார்ப்பசுங்கிளி, என்பது இரண்டுவேறுபட்ட நிறங்களைப்பொருந்த அமைத்தலால் விரோத அணி. இவ்வணி யிலக்கணத்தை, "கருங்குழலார்செங்கையினுல் வெண்கவரிப் பைங்கால்" என்று துவக்கும் நளவெண்பாச் செய்யுளின்கீழ் விரிவாக உரைத்திருக்கின்றோம் (5—243)

குறிப்பு:—போர்த்தொழில் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை, வலி மிகுந்தது. தார்ப்பசும்- இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை, வலி மிகுந்தது. தார் பெறுது - இரண்டாம் வேற்றுமைத்தொகை, வலிமிகவில்லை. பெறுதுபோய்- நிலைமொழி வினையெச்சமாயிருப்பினும், ஈற்றில்இருப்பது உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாதலால் வலி மிகவில்லை. கார்க்குழல் - பண்புத்தொகை, வலிமிகுந்தது; அல்லது கார் என்பதை இங்கு மேகம் என்ற பொருளில் கொண்டால், கார்போன்ற குழல் என உவமத்தொகையாகி அப்பொழுதும் வலிமிகும் (7—387). அரம்பையர் கமலம் - ஆறும் வேற்றுமைத் தொகையாயினும் நிலைமொழி உயர்திணையாதலால் வலி மிகவில்லை.

199179
M211,N28KN
N34.7.29

அரத்தமுண் டொளிரும்வா ளவுணர்ச் செற்றுநந்
திருத்தகு செல்வமுஞ் சிறப்பு நல்கிய
விரைத்துண ரலங்கலான் வீர சேனன்போன்
றிருத்தலா லிவனள னென்ன வேண்டுமால். 13.

(உரை). "அரத்தம் - இரத்தத்தை, உண்டு - குடித்து, ஒளிரும் - பிரகாசிக்கின்ற, வாள் - வாள்களை ஏந்திய, அவுணர் - அசுரர்களை, செற்று - வென்று, நம் - நம்முடைய, திருத்தகு-அழகு வாய்ந்த, செல்வமும் சிறப்பும் நல்கிய - செல்வத்தையும் சிறப்பையும் மீட்டுக்கொடுத்த, விரைத் துணர் அலங்கலான் - வாசனையுடைய பூங்கொத்துக்களால் கட்டிய மாலையை அணிந்தவனாகிய, வீரசேனன்போன்று இருத்தலால்- வீரசேனனைப் போல இருப்பதால், இவன் நளன் என்னவேண்டும்" இவன் நளனேஎன்று நாம் கொள்ளவேண்டும் (என்றான் இந்திரன்) - ஆல், அசை.

விரிவுரை:—அசுரர்களுக்குத் தோற்றுத்தோற்றுத் தேவர்கள் தம் பொன்னுலக வாழ்க்கையை யிழந்து உழல்வதும், பூவுலக வேந்தர்கள் சென்று அவுணரை வென்று அச்செல்வத்தைத் தேவருக்கு மீண்டுமளிப்பதும்விண்ணவர் தம் சரித்திரத்தில்பலமுறை நேர்ந்துளது. சம்பரனைவென்று, "இன்தளிர்க் கற்பக நறுந் தேன் இடைதுளிக்கும் நிழலிருக்கையை" இந்திரனுக் களித்தான் தயரதமன்னன். அசுரருக்கு அழியாமல் தேவர்களைக் ககுஸ்தனும் முன் ஒருமுறை காத்தனன். அர்ச்சுனன், நிவாதகவசகாலகேயர்களை 'இரவி வந்தொரு திசையின்வாய் நிசியெனப் பொருது" வானவருக்கு அரசு அளித்துளன். இவ்வண்ணம் வானவர்க்குதவி புரிந்திருப்பவர்களில் ஒருவன் வீரசேன மகாராஜன். இவன் நளன் தந்தை. நளனை இந்நாள்காறும் பார்த்திராத இந்திரன், தந்தையின் சாயலைக்கொண்டு அவன் மகனாகிய நளன் இவன் ஆதல்வேண்டும்என்று ஊகிக்கின்றான்.

குறிப்பு:—அவுணர் + செற்று = அவுணர்ச்செற்று; அவுணர்களைச்செற்று என்று விரியுமாகையால் இது இரண்டாம்வேற்றுமைத் தொகை. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாதென்பது பொதுவிதி.ஆயினும்இரண்டாம்வேற்றுமைத்தொகையோ, அல்லது இங்கிது எழுவாய்த் தொடரோ என்று சந்தேகம் உண்டாகக் கூடிய சில இடங்களில், இரண்டன் தொகைதான் என்று காட்டும்பொருட்டு வலிமிகும் என்று கூறியிருக்கின்றோம். (7 - 196). அவ்வாறு மயக்கம் விளைவிக்கக்கூடிய சந்தர்ப்பம் இச்செய்யுளில் நன்கு காணலாம். அவுணர் தாம் வீரசேனனைக்கொன்று தேவர்களை அளித்தனரோ, அல்லது வீரசேனன்தா னவுணரைக்கொன்று தேவர்களை அளித்தனனோ என்று ஐயுறும்படி இச்செய்யுள் அமைந்திருக்கின்றது. இந்நிலையில் 'அவுணர் என்பது எழுவாயோ, அல்லது செயப்படுபொருளோ வென்று எப்படித் தெரிந்துகொள்வது? ஆதலாற்றான் செயப்படு பொருளுடைய இரண்டாம் வேற்றுமைத் தொகையே அது என்று குறிப்பதற்கு வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்திருக்கின்றது.

---

சேற்றிதழ்த் தாமரை மலரத் தெண்கட
றோற்றுசெங் கதிரெனத் தோன்று நின்னையா
மேற்றநல் லோரையி லெழுந்தா லன்றோ
வாற்றெதிர்ப் பட்டன மலங்கல் வேலினாய். 14.

அன்வயம்:—"அலங்கல் வேலினாய், யாம், ஏற்ற நல் ஓரையில் எழுந்ததால் அன்றோ சேற்று இதழ்த் தாமரை மலரத் தெள்கடல் தோற்று செம் கதிரெனத் தோன்றும் நின்னை ஆற்று எதிர்ப்பட்டனம்' (என்று இந்திரன் நளனுக்கு முகமன் கூறினான்)

(உரை) அலங்கல் வேலினாய் - மாலை யணிந்த வேலாயுதத்தை ஏந்திய வேந்தனே, யாம் - நாங்கள், ஏற்ற நல் ஓரையில் - தகுதியான நல்ல ஒருஇலக்கினத்தில், எழுந்ததால் அன்றோ - புறப்பட்டதினால்தான் அன்றோ, சேறு- சேற்றிலுள்ள,இதழ்-இதழ்களை உடைய, தாமரை-தாமரை மலர்கள், மலர - மலரும்படி, தெள்கடல் - தெளிந்த கடலின்கண், தோற்று - உதிக்கின்ற, செம்கதிரென- சிவந்த சூரியனைப்போல, தோன்றும்- காணப்படுகின்ற, நின்னை - உன்னை, ஆறு - வழியில், எதிர்ப்பட்டனம்- சந்திக்கின்றபாக்கியம் உடையவர்களானோம்.

விரிவுரை:—"நாங்கள் புறப்பட்ட நல்ல இலக்கினத்தின்பயனாகவே உன்னை இவ்வழியிலெதிர்ப்படும் பேறு பெற்றோம்' என்று முகமன் கூறிக்கொண்டே இந்திரன் நளன்பால் நெருங்கினான்."இவனும்நாமும் செல்வது ஓரேசுயம்வரத்திற்கானால் நம்மானம்போம் ஆதலின் திரும்பலே நலம்" என்றான் யமன். "திரும்பிச்சென்று அரம்பையர் முகத்தைப் பார்ப்பது எவ்வாறு" என அயர்ந்த இந்திரன், இவன் வள்ளலாம் நளனெனத் தேர்ந்தவுடன், "எதுகேட்பினும் மறுக்கானிவன், இவனைக்கொண்டே நம்கருமத்தைமுடித்துக்கொள்ளலாம்" என்கின்ற ஊக்கம் அவனுக்குப் பிறந்திருத்தல் வேண்டும். நளனையே தமக்குத் தூதாகப் போக்குகின்ற சூழ்ச்சியும் இப்பொழுதே இந்திரனுக்குத் தோன்றிவிட்டது.

ஒலிக்கின்ற கடலின்நடுவே உதிக்கின்ற சூரியனைப் போல், ஆரவாரம் செய்கின்ற சேனையாகிய கடலின் நடுவே நளன் விளங்கித் தோன்றினான் என்னும் இது உவமையணி. "சூரியனைக்கண்டு தாமரை மலர்வதே போல், உன்னைக்காண எங்கள் கண்களும் மலர்கின்றன" என்னும் குறிப்புடையது முதலடி.

குறிப்பு:—சேறு + இதழ் = சேற்றிதழ் (சேற்றில் உள்ள இதழ்) ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாதலால், நிலைமொழியீற்றில் நெடிற்றொடர்க் குற்றியலுகரம் ஏறியுள்ள றகரமெய் இரட்டிப் புணர்ந்தது (6-891).

ஆறு + எதிர்ப்பட்டனம்,ஏழாம்வேற்றுமைத்தொகையில் றகரமெய்இரட்டாமல் ஆறெதிர்ப்பட்டனம் எனப் புணரவேண்டுமாயினும் செய்யுளில் எதுகைக்காக இரட்டப்பெற்றிருக்கின்றது.

---

## இலக்கணம்

B. யகர ரகர ழகர மெய்யீறுகள்:—(தொடர்ச்சி)

II இவ்வீறுகளும் + மெல்லின மெய்களும்.

மொழிக்குமுதலில் வரக்கூடிய மெல்லினமெய்கள் ங் ஞ் ந் ம் என்னும் இந்த நான்கே. அவைகளிலும், ஙகரமெய்யானது, அங்ஙனம் இங்ஙனம் எங்ஙனம் யாங்ஙனம் எனச் சுட்டு அல்லது வினாவெழுத்துக்களுக்குப்பின் அகரத்தோடு சேர்ந்து வருவது ஒழிய, வேறு அது மொழிக்கு முதலாக வரும் வழக்கில்லை.

(a) நிலைமொழி யிறுதியில் யகர ரகர ழகர மெய்களிருக்க, வருமொழிமுதலில் வரும் ஞ ந ம என்னும்



மெய்கள் யாதும் விகாரமின்றி எல்லாத் தொடர்களிலும் இயல்பாகப் புணரும்.

சாய் + ஞாயிறு = சாய் ஞாயிறு
கார் + ஞமலி = கார் ஞமலி—(ஞமலி-நாய்)
வாழ் + ஞாலம் = வாழ் ஞாலம்
காய் + நல்கினான் = காய் கல்கினான்
புகர் + நிறம் = புகர் நிறம்
தமிழ் + நயம் = தமிழ் நயம்.
வாய் + மொழி = வாய் மொழி
துணர் + மாலை = துணர் மாலை
இதழ் + முகர்ந்தான் = இதழ் முகர்ந்தான்.

(b) முன்னுரைத்த விதி பொதுவிதி யாகும். யகர மெய்யீற்றிற்கு மாத்திரம் சிறப்பாக ஒரு விதி யிருக்கின்றது. அதாவது,மெய் பொய் செய் என்பனபோல் நிலைமொழி குறிலோடு சேர்ந்த யகர மெய்யை ஈற்றிலுடைய சொல்லாயின்,வருமொழிமுதல்வரும் ஞகர நகர மகர மெய்கள் எல்லாத் தொகைகளிலும் மிகுந்தும் புணரலாம்.

மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்.
செய் + நன்றி = செய்ந்நன்றி.
பொய் + மொழி = பொய்ம்மொழி.
மெய் + நலம் = மெய்ந்நலம்.
மெய் + நின்றான் = மெய்ந்நின்றான்.
மெய் + மாண்பு = மெய்ம்மாண்பு.
நெய் + மணம் = நெய்ம்மணம்.

குறிப்பு:—(1) யகரமெய் போல் ஒலிக்கும் ஐ என்னும் உயிரேனும், அல்லது அதனோடு சேர்ந்து ஆன கை மை போன்ற உயிர்மெய்களேனும் ஓரெழுத்தொருமொழிகளாய் நிலைமொழியாகி நிற்குமெனின் வருமொழிமுதல் ஞகர நகர மகரங்கள் மிகுந்தும் புணரலாம்.

ஐ + நுனி = ஐந்நுனி (ஐ - நுட்பம்)
கை + நகம் = கைந்நகம்
மை + மேகம் = மைம்மேகம்
கை + ஞான்றது = கைஞ்ஞான்றது.
(ஞான்றல்-தொங்குதல்)

(2) இவ்விதம் தனிக்குறிலைச் சேர்ந்த யகரமெய்க்குப் பின்னும் ஐயோடு சேர்ந்துள்ள ஓரெழுத்தொருமொழிகளுக்குப்பின்னும்வருமொழிமுதல் மெல்லின மெய்கள் மிகுந்தாலும் மிகலாம்என்பதேயன்றி மிகாமற் புணரினும் பிழையில்லை. மெய் நவின்றான், பொய் மொழி, கைநீட்டினான், என்றும் இயல்பாய்ப்புணர்த்தலாம். ஆனால், தனிக்குறிலைச் சாராமல் வாய், காய், என்பனபோல் நெடிலைச்சார்ந்த யகரமெய்க்குப் பின் வருமொழிமுதல்மெல்லினமெய்கள் மிகுதல்கூடாது. வாய்ம்மொழி,காய்ந்நல்கினான் என்னின் அது பிழையாம். வாய்மொழி, காய்நல்கினான் என்றே புணரும். எனினும், காய்ந்நுனி என்றும் (பூம்முரி என்றும்) ஓரோவழி வருதலும் உண்டு.

(3) மேற்சொன்ன விதிகளின்படி யகர மெய்யீற்றின்முன் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தால் மிகலாமேயன்றி, ரகர ழகர ஈறுகளுக்குப்பின் மிகா. ஆயினும் ஓரோவழி, கதிர்ந்நுனி,இதழ்ந்நுனி,கதிர்ம்முரி,இதழ்ம்முரி என, ரகர ழகர ஈறுகளுக்குப்பின்னும் மெல்லினமெய் மிகலாகின்றது.

---

# காலம்

உலகெலாந் தோன்றி யொடுங்குதற் கிடமாயதும், இறைவனென முதலும் முடிவுங் காணப்படாததும்,இறப்புநிகழ்வு எதிர்வென்னும் வழக்கினுக் கேதுவாயதும்,பாகுபாடென்பதொன்றுமே தன்னகத்தில் இலதாயினும் உலகம் வழங்கிவருவதற்கே நாளென்றும் வாரமென்றும் மாதமென்றும் பருவமென்றும் யாண்டென்றும் மாந்தரால் வரையறுத்து வழங்கப் பெறுவதுமாகிய இயல்பினையுடையது காலமாகும். அக்காலந்தான் நிகழ்ந்தது நிகழ்கின்றதென்பது முதலாய வழக்கிற் கிடமாகி, அத்தொடர்புபற்றியே எப்பொருட்கு மிடமாகிய ஓர் முடிவற்ற பொருளாகின்றது. அது பாகுபாடொன்றுந் தன்னிடத்திற் பெற்றிலதேனும் நாள் முதலிய பகுப்பிற்குரியதாக நாம் வழங்குமாறு தோற்றிநிற்பது, "நாளெனவொன்றுபோற் காட்டி" என்ற திருவள்ளுவனாரது வாக்கிற்கிணங்க வெறுந் தோற்றமே யாம்.

ஆயினும் உலகவழக் கியங்குதற்கே நாம்அவ்வாறு பகுத்துக்கொண்டுளே மென்பதே கருதற்பாலதாம். நம்முடைய இப்பாகுபாடு இயல்வதாகும்படி நமக்குத் துணைசெய்வன ஞாயிறும் மதியும் ஆதியவொளிகளும் உலகியற்பொருள்களின் ஆக்கம்முதலாய மாறுபாடுகளுமே யாம். இப்பாகுபாடுதான் மாந்தரது நாகரிக வளர்ச்சிக்கும் அவரது பழக்கவழக்கங்களுக்கும் அவர் வாழுமிடத்திற்குந் தக்கவா றவ்வப்பொழுது சிறுசிறு மாறுதலைப்பெற்றே வளருமென்பதிற்சிறிதுமையமில்லை.

இத்தகைய காலப்பாகுபாட்டிற் பெரும்பாலும் மாந்தரனைவரும் ஒருமித்த கருத்தினராகவே காண்கின்றனர். இயற்கையும் அன்னவாறே யமையுமாறு தூண்டுகின்றது. அந்தந்த மொழிகளினு முள்ள குறியீடுகளும் இதனை வெளியிடுகின்றன. இவ் வியல்பினை நாம் நமது தொன்னூல்களிற் காணப்பெறுகின்ற நம் முன்னோரது பழக்க வழக்கங்களிலிருந்துந் தற்காலத்திய நமது வழக்கிலிருந்தும் ஒருவாறு நன்கு உணரலாம்.

இப்பொருளைபற்றி நாம் ஆராய்ந்தறிவதும் வருங் கால வளர்ச்சிக்கொரு துணையாகுமென்பதுகருதியே ஆராய்ச்சியாளரின் நன்மனதிற்கோர் சிறுவிருந் தீண்டளிக்கப்பெறுகின்றது.

### தமிழ்மக்களின் காலப் டாகுபாடு.

காலம்பற்றியாராயப்புகுகின்ற நமக்குஇன்றியமையாத் துணையாய் நின்று உதவவல்லது ஒன்று உண்டு. அத் துணைதான் யாதெனின், பழந் தமிழ்மக்கள் செய்துகொண்ட காலப்பாகுபாடுபற்றிச் சிறிதளவேனும் நா முணர்ந்துகொள்வதாகும். அவ்வாறுநா முணர்ந்துகொள்ள வேண்டுமிடத்து, மிகத் தொன்மையதும் இடைச்சங்க நூலெனப்படுவது மாகிய தொல்காப்பியமும், கடைச்சங்க நூல்களாகிய பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் பதினெண் கீழ்க்கணக்கும், ஐம்பெருங் காப்பியங்களாகிய சிலப்பதிகாரம் முதலியனவுங் காண்போமாயின் அதனை எளிதிற் பெறுவோம். அந்தத்தமிழ்மக்கள் செய்துகொண்ட பாகுபாடுதான் என்னேயெனின்,அவர், தாம் வாழும்இடமாகிய நிலத்தை நான்குவகையாகப் பகுத்து அவற்றிற்குக் குறி

ஞ்சி முதலாய பெயருந் தந்து வழங்கினர். அவ்வழக்கின்படி மலையும் மலைசார்ந்த விடமுங் குறிஞ்சியென்றும், காடும் காடுசார்ந்த விடமும் முல்லையென்றும், நகரும் நகர்சார்ந்தவிடமும் மருதமென்றும், கடலும் கடல்சார்ந்த விடமும் நெய்தல் என்றும் அழைக்கப்பட்டன. இந் நான்குவகை நிலங்களினுள்ளும் ஏதேனுமொன்று தன்னியல்பிற்குன்றுமாயின தனைப் பாலை என்றனர்.

இவ்விதமே அத்தமிழ்மக்கள் தங்களொழுக்கத்தினையும் அகம் புறமென விருபாற்படுத்தி, இன்பம்பற்றிய வொழுக்கமெல்லாம் அகத்திணை (திணை-ஒழுக்கம்) யெனவும், அறம் முதலியன பற்றிய வொழுக்கமெல்லாம் புறத்திணையெனவும்வகுத்திருந்தனர். ஆதலின் அறம்பொருள் இன்பம் வீடெனு முறுதிப்பொருள் நான்கினையும் அவர் அகப்பொருள் புறப்பொருள் என்றிருவகையினுள்ளேயே அடக்கிக்கொண்டனர் என்பதாயிற்று. அவரது இவ் வொழுக்கங்களின் இலக்கணங்களைக்கூறும் பகுதிக்குப்பொருளிலக்கணமென்று பெயர்கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பொருளிலக்கணந்தான், அகப்பொருளை ஐந்திணை முதலாகவும் புறப்பொருளை வெட்சித்திணை முதலாகவும் விரித்துரைக்குமிடத்து முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருளென அவ்வைந்திணையைமூன்றுவகைப் படுத்தியது. அவைகளுள் முதற்பொருளெனப்படுவது நிலமும் பொழுதுமாம். நிலத்தின் வகையெல்லாம் முன்னர் உரைக்கப்பெற்றன. பொழுதினையும் அவ்வாறே சிறுபொழுதென்றும் பெரும்பொழுதென்றுமிருபாற் படுத்துகின்றது. சிறுபொழுதெனப்படுவன நாளின் உட்பிரிவுகளாகவும் பெரும்பொழுதென்பன யாண்டின் பகுதிகளாகவும் மதிக்கப்பெறுகின்றன. இப் பொழுதுகளைத் தொகுத்துரைக்கும் நாற்கவிராச நம்பியும்,

> மாலை யாமம் வைகறை யெற்படு
> காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்
> கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்.
> (நம்பி அக - அக - 12.)

என்றனர். எனவே சிறுபொழுதுதான், மாலை யாமம் வைகறை காலை நண்பக லென் றைந்தாகுமென்று கூறியதாயிற்று. எற்பாடென்று மற்றுமொன்று சேர்த்துச் சிறுபொழுது ஆறு என்றும் உரைப்பார் பலர். இதனால் அறுபது நாழிகையுள்ள வொருநாளை ஆறு பிரிவு செய்து ஒவ்வொரு பிரிவும் பத்து நாழிகையாக ஒவ்வொன்றையும் முறையே மாலை முதலிய பெயர்களாற் றமிழர்கள் வழங்கிவந்தனர் என்பது தெளிவாகும்.

இவ்வாறே பெரும்பொழுதையும் கார் முதலாக ஆறு பருவங்களாகப் பகுத்திருந்தனர் என்பதும்

> காரே கூதிர் முன்பனி பின்பனி
> சீரிள வேனில் வேனி லென்றாங்
> கிருமூன்று திறத்தது தெரிபெரும் பொழுதே
> (நம்பி அக - அக - 11.)

என்று கூறிய நாற்கவி ராசரின் மொழியாலும் உணரலாம். ஆகவே ஒரு யாண்டின் இயற்கைத் தோற்றவழிவுகளை ஆறு பாகுபாடுசெய்து ஒவ்வொன்றின் இயல்பிற்குந் தக்கவாறு கார் முதலிய பெயர்களையும் அவரமைத்துக்கொண்டனர் என்பதும் ஈண்டு உணர்தற்பாலதாம்.

இப்பாகுபாடுகளேயன்றி மாதமென்னும் பிரிவினையும் அக்காலத்து இருந்ததெனினும் அம்மாதமென்னுங் குறியீட்டாற் காலத்தைக் குறிப்பிடுவது மிக அருகியே காண்கின்றது. அன்றியும் அகப்பொருள் பற்றிய காலப் பாகுபாட்டை நாம் காண்போமாயின், பண்டைத்தமிழ்மக்கள் பெரும்பொழுதைப் பெரும்பாலும் பருவங்குறித்தே வழங்கிவந்தார்களென்பது தெளிவாகும். மாதப் பாகுபாட்டாற் குறிப்பிடுவதும் உண்டெனினும் அது மிகவருகியதேஎன்பது மாதமென்ற தலைப்பின்கீழ் விளக்கப்பெறும். ஈண்டுக் காணப்படுகின்றவைகளான நாள் நாழிகை மாதம் பருவம் யாண்டு என்பனபோலவே வாரம் என்றுமிக்காலத்து வழக்கிலொன்றுளது. இது பழமையானதாகக் காணப்படவில்லையாயினும் "புதியன புகுதல்" என்பதற்கு ஓர் இலக்கமாவதை 'வாரம்' மென்னும் பகுதியிற் காண்போம். மற்றும் ஊழி முதலியனவும் வழக்கிலுண்டேனும் அவை ஆராய்ச்சியிற் றனிப்பட்டவோரிடம் பெறுதற்குரியனவாகுமென்பது கருதிஅவை ஈண்டுக் கழிக்கப்பெற்றன. இனிக் காலத்தின் பகுதிகளாகக் கருதப்பட்ட நாள் முதலியவற்றி னியல்பைச் சிறிது ஆராய்வோம்.

---

## நம்மாழ்வார் வைபவம்

### திருவாய்மொழி

6-ம் பத்து 8-ம் தசகம்.

[431-வது பக்கத் தொடர்ச்சி]

7-ம் பாசுரம்.

> பூவைகள் போல்நிறத் தன்புண்ட ரீகங்கள்
> போலுங்கண்ணன்
> யாவையும் யாவரு மாய்நின்ற மாயனென்
> னாழிப்பிரான்
> மாவைவல் வாய்பிளந் தார்மது சூதற்கென்
> மாற்றஞ்சொல்லிப்
> பாவைகள் தீர்க்கிற்றி ரேவினை யாட்டியேன்
> பாசறவே.

பதக்குறிப்புக்கள்:—பாசு-கூடியிருத்தல், அறவு-இல்லாதிருத்தல், பாசறவு-நாயகனைப் பிரிந்ததுயர். யாவையும் யாவருந் தானாய்-எல்லாச்சேதநாசேதநவஸ்துக்களிலும் உள்நின்று அவற்றின்தோஷங்களில் யாதும் சம்பந்தப்படாமலே உகைமுழுவதும் நிறைந்தவனாய், மாயன் - ஆச்சரிய சக்தியுடையவன், ஆழிப்பிரான் - ஸ்வய ஸௌந்தரியத்தோடு சக்கிராயுதத்தின் சோபையும் சேர்ந்தவன். வல்வாய் மாவை- குதிரைவடிவமெடுத்த அசுரனை வாயைப் பிளந்து கொன்றவன். மது வென்னுமசுரனைச் செற்றவன். என் மாற்றம்- "இதுவோ தக்கது" என்ற முன் பாசுரங்களில் தூதர்களுக்குக் கற்பித்துப் பகவானிடத்தில்சொல்லச்சொன்ன வார்த்தைகள்.

கருத்தும் குறிப்பும்:— இப்பிராட்டி கண்ணில்கண்ட வண்டுகள் பக்ஷிகளையும், அருகாமையிலுள்ளகிளிகள் பூவைகள் குருகுகள் தும்பிகளையும், தூதனுப்பிய பிறகு, எவரையுமனுப்ப இயலாமையால் வேறொருவிதபுத்திக்குத் தோன்றாமையினால், தன்னிடத்திலுள்ள மரப் பொம்மையை நோக்கி "எனக்குற்ற விரஹவியஸநத்தைப் பகவானிடம் உரைத்து நீ (தீர்க்கிற்றிரே) தீர்ப்பிக்கவேணும்" என்கிறாள். யாதுஒன்றும் உணர்ச்சியில்லாத அசையாப்பொருளைத் தனக்குத் தூது செல்லச்சொல்வது தன் விரஹத்தின் ஆற்றாமைபற்றியும் தன் ஆபத்துக்கு உதவ வேறேஸாதனமில்லாமையாலும் வாய்திறந்து பயனில பேச்சைப் பாராட்டிச் சொல்லியபடி. வினையாட்டி - நாயகனிடத்திலிருந்து வெகுகாலம் பிரிந்திருக்கும்படியான பாபத்தை இயற்றியவள். இப்பிராட்டியின் மனநிலையைத்தென்னாட்டுத் தமிழில் புத்திமுட்டு என்பர்.



---

8-ம் பாசுரம்.

> பாசறவெய்தியின்னேவினையேனெனையூழிநைவேன்
> ஆசறுதூவிவெள்ளைக்குருகேயருள்செய்தொருநாள்
> மாசறுநீலச்சுடர்முடிவானவர்கோனைக்கண்டு
> ஏசறு நும்மையல் லால்மறு நோக்கிலள் பேர்த்துமற்றே.

அவதாரிகை:—மயக்கமடைந்த புத்தி இப்பிராட்டிக்குச் சற்றுத் தெளியவே "நீங்களும் தூது செல்லவேண்டுமென்று இப்பிராட்டி சில குருகுகளை யபேக்ஷிக்க அவை போகாதிருந்தவாறே, பிரிந்த உடனே தானே நாயகனுக்குத் தூதுவிடுவது சரியோ, அவன் திரும்பக் காலவிளம்பரம் செய்தால்அல்லவோ தூதனுப்புவதுயுக்தமாகுமென்று, குருகளே, நீங்கள்புறப்படமாட்டோமென்கிறீர்களோ?" என்கிறாள்—ஆறாயிரப்படி.

பொழிப்புரை:—நீங்கள் கண்ணால் பார்க்கிறீர்களே, அவனையிழந்து மெய் தளர்ந்து மெலிந்து வாடி இவ்வண்ணம் நான் வியஸநப்படுவது எத்தனையூழிக்காலமாய்விட்டது. ஆகையினால் பரம தயவுள்ள நீங்கள் நீலமணிபோலக் காந்தியுடைய குழல்களாலலங்கரிக்கப்பட்ட அவன், அயர்வற்ற அமரர்களோடு சூழ்ந்து களிப்படைந்துகொண்டிருக்கையில் அவனிடம் சென்று, உன்பக்கலிலே ஈடுபட்டுப்போனவள் நீ உபேக்ஷித்தாலும் உன்னுடைய கடாக்ஷமல்லது வேறொரு துணையும் அறியாள். அங்ஙனேயும் அபேக்ஷிக்கமாட்டாள், நீ யல்லால் இலள், என்று—சொல்லவேண்டுமென்று சில குருகுகளை யபேக்ஷிக்கிறாள்—

விசேஷக் குறிப்புக்கள்:—பாசறவு எய்தி - பிரிந்து துன்புற்று. இன்னே - தன் மெலிந்த தேஹத்தைக் குருகுகளுக்குக் காட்டி (இன்னே) இம்மாதிரியாயிற்று என் ஸ்திதி, வாய்கொண்டு சொல்ல இயலவில்லை என்கிறாள். தான் மெலிந்து வருந்துவதை நாயகனுக்கு உரைக்கச்சொல்ல வந்தவளல்லள். தனது மனோநிலைமையும் அவனது அருமைத்துணையின்றித் தான் வருந்துவதையும்சொல்லவேணுமென்று மாத்திரமே குறிப்புவைத்துத் தான் அகதி என்று பின்னர் முடிக்கிறாள்—ஏசறு = ஏசு + அறு = பிறர் நிந்தித்தாலும் அவமானம் பாராட்டாமல் உம்மையே யல்லது பிற துணையை அபேக்ஷிப்பவளல்லள் என்று உணர்த்தச் சொல்கிறாள். ஆசறுதூவி = குற்றமற்ற இறகுகள்.

---

9-ம் பாசுரம்.

> பேர்த்துமற் றோர்களை கண்வினை யாட்டியே
> னொன்றிலேன்
> நீர்த்திரை மேலு லவியிரை தேரும்
> புதாவினங்காள்
> கார்த்திரள் மாமுகில் போற்கண்ணன் விண்ணவர்
> கோனைக்கண்டு
> வார்த்தைகள் கொண்ட ருளியுரை யீர்வைகல்
> வந்திருந்தே.

உரை:—பேர்த்து- உம்மைத் தவிர, மற்றோர் களைகண் - இடுக்கண்வந்தவிடத்து வேறு உதவி, வினையாட்டியேன்- உம்மை விட்டுப் பிரிந்திருக்கும்படி பாவங்களை இயற்றிய நான், அறிகிலேன்- அறிந்தவளல்லள், நீர்த் திரைமேல் உலவி - மண்தரையில் புல்தேடி மேயும் ஆடுமாடுகளைப்போல், ஜலத்தின்மேல் இரைதேடி மேயும், புதா - நாரை, இனங்காள் - கூட்டங்களே, கார்த்திரள்-இருண்டமேகம்போல்கிருஷ்ணவர்ணமுள்ள கண்ணன், விண்ணவர்கோன் - அமரநாட்டாருக்கு அரசன்; (அவர்கள் அவனைப் பணிவது, அவனது குணங்களில் தோய்ந்தும் அவனது திவ்விய வடிவு ஸௌந்தரியங்களிலே யீடுபட்டும் அவனது திவ்விய குணங்களைவியந்தும் ஸ்வயமாய் அடிமையாயிருத்தலால். அவன் ஆணையிடுவதுமில்லை, கீழ்ப்படிய அவசியமுமில்லை; முழுச் சுதந்தரம் உள்ளவர்கள்; எனினும் அவனுக்கடிமையாயினர்.) கண்டு - அவனையல்லாமல் வேறு துணையில்லாதவள் நான் என்று சொல்வதினிமித்தம்கண்டு என் வார்த்தைகளை ஸமர்ப்பிவித்து, வார்த்தைகள்கொண்டு- அவனளிக்குமுத்திரவை அவன் சொல்லியபடி அவனின் திருவாக்குக்களைக்கொண்டு வந்து, இருந்து-நான் வெகுமானித்து அளிக்கும்பீடத்தில் குந்தியிருந்து, வைகல் - தினந்தோறும், உரையீர்-எனக்கு ஆறுதல்பிறக்கும்படி சொல்லவேண்டும்.

குறிப்புக்கள்:—மேகமானது, வயல்கள் புல்தரைகள் செய்கால் நிலங்களைவிட்டுஸமுத்திரத்தில்வர்ஷிப்பதுபோல் பகவான் ஸதா அவனது தர்சநத்தால் ஸந்தோஷப்பட்டுஅவனை அநுபவிக்கின்ற அமரர்களுக்கு அருள்செய்து கலவிகொடுக்கின்றான். என்போன்ற தீனர்களுக்கு அவன் அருள்செய்வதில்லை யென்பது தாத்பரியம்.

---

10-ம் பாசுரம்

> வந்திருந் தும்மு டையமணிச் சேவலும்
> நீருமெல்லாம்
> அந்தரமொன் றுமின் றியலர்மேலசையு
> மன்னங்காள்
> என்றிருமார்பற்கென்னையின்னவாறிவள்
> காண்மினென்று
> மந்திரத்தொன் றுணர்த்தியுரையீர்மறு
> மாற்றங்களே.

பதக் குறிப்புக்கள்:—அந்தர மொன்றுமின்றி- ஒரு கலவிக்கும் மற்றொரு கலவிக்கும் நடுவில் இடைவெளி யாதும் இல்லாமல் - அதாவது, ஸதாஸர்வகாலமும் (என் நாயகனும் யானும்போல் பிரிந்து பிரிந்து கூடாமல்) இன்பமுறக் கூடிவாழ்கின்ற அன்னங்களே! உங்களினுடலத்தைக் காட்டி, இதுபோல் காமவேட்கையால்பசப்புற்று யான்வெளுத்திருக்கிறேனென்று உணர்த்துங்கோள்-அவனறிவுக்கு எட்டவையுங்கோள் - ஒன்றுணர்த்தி - இந்தச் சுவல்பதூதுசமாசாரத்தைத்தெரிவிக்க இதெல்லாம் - "மந்திரத்து" ஆகவேணுமென்கிறாள்-அதாவது, திருமார்பணுகிய திருமால் பெரிய பிராட்டியாரோடு ஓர் தனிவிடுதியிலே பறிமாறுகின்ற சமயத்தில், ஒன்று - சில்லரை வார்த்தையை

அவன் திருவுள்ளத்தில் தைக்கும்படிசொல்லிஅவன் கொடுக்கும் மறுமாற்றம் வந்து சொல்லவேணும்.

கருத்து:—அன்னங்கள் சதாசர்வகாலமும் கலவை செய்து ரஸிப்பவர்கள், என் பசப்புற்ற தேகத்தைப் போல் வெளுத்தவர்கள், தங்கள் உடலத்தைக்காட்டி இப்படி உம் பிராட்டி பசப்புற்று வெளுத்துப் போயினாள், அவளுக்குஅருள்புரியவேணுமென்று சொல்ல வல்லவர்கள். அவர்கள் தூதுபோய்ப் பிராட்டிஸந்நிதியிலே பகவானுக்கு அறிவிக்கவே அவன்அருள் சுரக்கும் என்று தாத்பரியம்.

---

11-ம் பாசுரம்

மாற்றங்களாய்ந்துகொண்டுமதுசூத
பிரானடிமேல்
நாற்றங்கொள்பூம்பொழில்சூழ்குருகூர்ச்சட
கோபன்சொன்ன
தோற்றங்களாயிரத்துளிவையுமோர்
பத்தும்வல்லார்
ஊற்றின்கண்ணுண்மணல்போ லுருகா
நிற்பர்நீராயே.

பதக் குறிப்புக்கள்:—மதுசூதபிரான் - வேதங்களை அபகரித்த மது என்கிற ராக்ஷஸனை வென்று வேதங்களைத் திரும்பநிலைநிறுத்தின பரமோபகாரகன். தோற்றங்கொள் - பக்தியாலெழுந்த வாக்குக்களான திருவாய்மொழிகள். மணல்போ லுருகாநிற்பர் - மலைப்பிஞ்சு என்று சொல்லவல்ல சிறியமணல்கள் மனமுருகி (நீராய்) கண்ணீர் விடுவதாகக் கவி கல்பனை.

வெகு ரஸாவஹமான பதங்களை ஆய்ந்து மதுசூதனனடிமேல் பூக்கள்நிறைந்த உத்தியானவனங்களால் சூழ்ந்த குருகூரில் சடகோபாழ்வார் தனக்குத்தானே பக்தியால்பிறந்த பாசுரங்களால்பாடிக் கோத்துச்சேர்த்த இப்பத்தும் வல்லார், ஊற்றின்கண்உள்ள மணல்கள் உருகுவதுபோல் இவ்வாழ்வாரின் மனக்கிலேசத்தைக் கணிசித்து நீராய் உருகுவார்கள்.

விசேஷக்குறிப்பு:—இத்தசகத்தில் சடகோப ஆழ்வார், பகவானின் பக்தர்களுள் அந்தரங்கமாய் அவனையே கருதி யனுபவிக்கும் திருடசித்தர்கள்அவனது திருவருள்ஈட்டத்தக்கஉதவியாவார்களென்று கற்பிக்கிறார்.

---

# மதுரைக் கோவை

[443-வது பக்கத் தொடர்ச்சி]

## V வினைமேற் பிரிவு.

**வினைமேற் பிரிகின்றமை தலைவன் றோழிக்குரைத்தல்**

காலைக் கடிமுர சொன்னுர் முரசென்று
காணிலிந்த
மாலைக் குடையை மதியென்ப ரோமது
மாரியருச்
சோலைப் புறம்பணை சூழ்மது ராபுரிச்
சொக்கர்நன்னுட்
டோலைக் குழைபொருங் கண்ணியெண் ணுதன
வொன்றிலையே. 366.

**வினைமேற் பிரிந்தமை தோழி தலைவிக் குரைத்தல்**

குறைவந்த வையைக்கு மண்சுமப் பார்சொக்கர்
கூடலந்திப்
பிறைவந் தரும்பு நுதற்றிரு வேயறம்
பேணிமனு
முறைவந்த தங்க ளரசாளு நீதி
முதன்மைக்கொன்னுர்
திறைவந்த தில்லையென் றூர்தெரி யாதன்பர்
சிந்தனையே. 367.

**தலைவன் பிரிந்தமை கேட்டுத் தலைவி புலம்பல்**

ஈட்டுஞ் சிறிய குருகா கிலும்பிரி
வென்றுநெஞ்சிற்
கோட்டும் பொழுது பொறுதென்ப ரேசொக்கர்
கூடலின்பம்
கூட்டுங் கலவி தருவார் பிரிவெனும்
புன்சொலின்று
கேட்டும் பொறுத்தனை யேபாவி யாவிநின்
கேண்மைநன்றே. 368.

**கூதிர்க்காலங் கண்டு வருந்தல்**

சுழிக்கும் புனல்வையை சூழ்மது ராபுரிச்
சொக்கரஞ்சும்
பழிக்கஞ் சலர்சென்ற நாட்டில்லை யோபகி
ரண்டமுண்டு
தெழிக்குங் கடையுகக் காலவெங் கோபச்செந்
தீயெழுந்து
கொழிக்கும் பொறியென்ன லாயின வாடைக்
கொடுந்துளியே. 369.

**பனிக்காலங் கண்டு வருந்தல்**

தூகாது வாடிய மாறிநின் றூடிய
சொக்கர்செம்பொற்
கரகால வேலன்ன கண்மடவா யென்ன
காலவண்மை
யுரகா டவிமுடிப் பார்காவல் பூண்ட
வொருவர்தந்த
விரகா னலம்வந்து வெம்பனி யாக
வெளிப்பட்டதே. 370.

**இளவேனிற் காலங்கண்டு வருந்தல்**

கந்தார வண்டிமிர் தார்க்கடம் பாடவிக்
காவலர்நாட்
டெய்ந்தார் தனியிருந் தாற்றவல் லார்மல
ரோடையும்பூஞ்
சந்தா டவியுந் தழையினஞ் சூகமுந்
தைவந்ததோர்
மந்தா நிலமுங் கொணர்ந்திள வேனில்
வழிப்பட்டதே. 371.

**கார்கண்டு வருந்தல்**

அன்னம் பனிநடை யாயடி மாறிநின்
றூடல்கண்டு
தென்னன் பரவுந் திருவால வாயர்
திரையலம்பும்



பொன்னஞ் சடிலமு மைக்கான கண்டமும்
போலெழுந்து
மின்னம் புயல்வந்த தன்பர்பொற் றேரின்ன
மீண்டிலவே. 372.

**பருவ மன்றென்றல்**

கறையிட்ட வேல்விழி யாய்பிரிந் தார்சொன்ன
காலமுமன்
றுறையிட்ட காருமக் காரன்று காணுமை
பாகர்தொல்லை
மறையிட்ட பாடல் மதுரேசர் சுந்தர
மாறரன்று
சிறையிட்ட நாண்முதற் றிங்கண்மும் மாரி
திளைப்பதுவே. 373.

**பாசறை யுருவெளி**

சுற்றத் தொடுந்தொலை யத்தொலை யாரைத்
தொலைத்தகள
முற்றத் தனிவந்து தோன்றுத லாலன்பர்
மோகவெள்ளம்
வற்றக் கடைகணிப் பார்மது ராபுரி
வாகைதருங்
கொற்றத் தனிக்கொடி யோவல வாநங்
குலக்கொடியே. 374.

**விரைவது பயன்**

கோடாப் புரவி யிரவிபொற் றேரொடு
கூட்டிநமக்
கோடாப் புரவியைப் பூட்டினை யேபல
வூழிசென்று
மாடாக் கடைமணி யாரலை வாய்நண்ப
வங்கிருந்து
வாடாத் தளரு மடந்தைக்கென் னுயிர்ந்த
வஞ்சனையே. 375.

**தலைவன் றேர்வர வுரைத்தல்**

தொடைமணி யார்முலை யீரு ரதிர்கொள்ளுஞ்
சொக்கர்வெள்ளை
விடைமணி யோசை யொலிப்பது போற்கடல்
வேலிகிலங்
கடைமணி யோசை கறங்காது காப்பவர்
கைக்களிற்றின்
புடைமணி யோசை யிருசெவித் தாரையும்
பூரித்ததே. 376.

**மறவாமை கூறல்**

மனைக்கற் பகவல்லி யேயொரு காது
மறந்தொருகா
னினைக்கைக் கிடமில்லை யில்லைகண் டாய்சினை
நீலவண்டு
கனைக்கக் கமழ்கொன்றை யார்கடம் பாடவிக்
கன்னிநெடும்
பனைக்கைக் கடாசலம் பூச லறுதடும்
பாசறைக்கே.

வினைமேற் பிரிவு முற்றும்-

---

## VI உற்றுழிப் பிரிவு.

**தலைவ னுற்றுழிப்பிரிந்தமை கூறல்**

மருவாய் முயங்கி மயங்கிவிற் றூவின்ப
வாரிவெள்ளந்
தருவா ருனையும் பிரிந்தன ரால்முத்
தமிழ்மதுரைத்
திருவால வாயர் திருப்பாத ராகிய
தென்னர்தெவ்வைப்
பொருவார் புரிசையு நாடுமென் னுமின்று
பூங்கொடியே. 378.

**பிரிவாற்றமை கூறல்**

காருட லாவள ருங்கடம் பாடவிக்
காவலர்நாட்
டாருட லாவி யகன்றிருந் தாரச
லக்கொடிபோ
லோருட லாகத் தவம்புரி யாத
வுனக்குநெஞ்சே
யீருட லாயிருந் தாலிது வோவின்ன
மெய்துவதே. 379.

**பருவங்கண் டிரங்கல்.**

சிந்துஞ் சிறிய துளியரி தாமன்று
சென்றவழி
வந்தும் புரவலர் வந்தில ரேமது
மாரியும்பூங்
கொந்துந் தருங்கொன்றை யார்கூட னுயகர்
கொற்கைமுத்துஞ்
சந்துந் தருமுலை யாயெங்ங னேவுயிர்
தாங்குவதே. 380.

உற்றுழிப் பிரிவு முற்றும்.

---

# இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

அங்கம் 4. களம் 1.

[441-வது பக்கத் தொடர்ச்சி]

நெவில்லி:—இனியென்ன! நான் படுநாசமாகிவிட்டேன்.

டோனி:—அது நிச்சயந்தான், சந்தேகமில்லை.

நெவில்லி:—உன்னைப்போன்ற ஒரு முழு மூடனைத் துணைகொண்ட எனக்கு வேறு என்ன கிடைக்கக்கூடும்! எத்தனை தலையாட்டினேன், எத்தனை சாடை காட்டினேன்; இந்தமூடம் ஒன்றையும் கவனிக்கவில்லையே.

டோனி:—என்ன கோபமடா இந்த இராசாத்தியம்மாளுக்கு! உன் சாமர்த்தியந்தான் உன் காரியத்தைக் கெடுத்ததேயொழிய என் மூடத்தனம் கெடுக்கவில்லை. குள்ளன்கட்சிக் கோழியையும் பெரியகட்சிக் கோழியையும்பற்றி நீ படித்த ஒழுங்கைப்பார்த்தால், அத்தனையும் பொய்யென்று யார்தான் சந்தேகப்படுவார்?

[ஹேஸ்ட்டிங்ஸ் வருகிறான்]

ஹேஸ்ட்:—இப்படியா செய்தி! என் கடிதத்தை உன் தாயின்கையில் சேர்த்து எங்களைக் காட்டிக்கொ

டுத்துவிட்டாய் என்பதை எனது வேலைக்காரன் மூலமாக அறிகிறேன். ஏனையா, உனக்கு அழகா இது!

டோனி:—அடெயடெ! இதுவும் ஒன்று வந்துவிட்டதடா, இங்கே! உன்னைக் காட்டிக்கொடுத்தது யாரென்று இந்த இராசாத்தியையே கேள். அத்தனையும் அவள் வேலையே, என்னுடைய வேலையல்ல.

(மார்லோ வருகிறான்.)

மார்லோ:—இப்படியா செய்தி! எல்லாருமாய்ச் சேர்ந்து என்னை இப்படி ஆட்டிவைத்தது உங்களுக்கழகா! கண்டோரெல்லாம் என்னை இகழ்ந்து பரிகசித்துச் சிரிப்பாய்ச்சிரிக்கும்படி ஆயிற்றே!

டோனி:—அடெயடெ! இதுவும் ஒன்று வந்துவிட்டதடா இங்கே! பழைய வைத்தியக்கார ஆஸ்பத்திரி முழுவதும் இவ்விடந்தான்கூடுவதற்குஉத்தேசித்திருப்பதாகத் தோன்றுகிறது.

நேவில்லி:—நம்மில் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கின்றபெருமகன், ஐயா, அதோ இருக்கின்றார்.

மார்லோ:—அவனுக்கு நானென்ன சொல்வது! சிறுவன், மடையன்! அவன் வயதும் மடமையும் அவனை இப்பொழுது காப்பாற்றுகின்றது.

ஹேஸ்ட்:—அவலக்ஷணக் குரங்கு! அதை அடிப்பதற்கும் அவமானமாயிருக்கிறது.

நேவில்லி:—இருந்தாலும், நம்முடைய கஷ்டத்தைக்கண்டு களிப்பதற்குப் போதிய சூதும் குறும்பும் நிறைந்ததாயிற்றே இது.

ஹேஸ்ட்:—உணர்ச்சியற்ற நரிக்குட்டி—

மார்லோ:—குறும்புந் துஷ்டத்தனமுங் கொண்ட கழுதை—

டோனி:—ஏஹே! அடெயடெ! உங்கள் இரண்டு பேரோடும் இதற்காகத் தனித்தனியாகச் சண்டை செய்து பிய்த்துவிடுவேன்—பழமுறத்தை.

மார்லோ:—அவனோ, நாம் கோபித்துக்கொள்வதற்குத் தகுதியற்றவன். அவன் கிடக்கின்றான். ஆனால் ஹேஸ்ட்டிங்ஸ், உன்னுடைய நடத்தைக்கோ நீ தக்க பதிற் சொல்லவேண்டியவனாக இருக்கின்றாய். நான் செய்த தப்பு உனக்குத்தெரியும், ஆயினும் நீ என்னைத் திருத்தவில்லை.

ஹேஸ்ட்:—என்னுடையகாரியங்களெல்லாமே கெட்டுப்போய் நான் தவித்துக்கொண்டிருக்கிற இப்பொழுதா கேள்விக்கும் பதிலுக்குங் காலம்! மார்லோ, நட்பிற்கு உரியதாகுமா இது?

மார்லோ:—தாங்களோ, ஐயா—

நேவில்லி:—நீங்கள் தப்பெண்ணங்கொண்டு நடக்கின்றீர்களென்பது எங்களுக்குத் தெரிவதற்குள்ளே எல்லாம் கைகடந்துவிட்டது. ஆகையால் உங்களைத் தெளிவிக்கவில்லை. கோபங்கொள்ளாதீர்.

(ஒரு வேலையாள் வருகிறான்)

வேலையாள்:—நீங்கள் உடனே புறப்படவேண்டுமென்று அம்மா சொல்லச் சொன்னார்கள். குதிரைகள் வந்துவிட்டன. உங்கள் பெட்டி படுக்கைகள் பக்கத்தறையில் இருக்கின்றன. பொழுது விடிவதற்குள் நாம் முப்பது மைல் போகவேண்டும்.

[வேலைக்காரன் போகிறான்]

நேவில்லி:—நல்லது, நல்லது; இதோ வந்துவிட்டேன்.

மார்லோ:—(ஹேஸ்ட்டிங்ஸைப் பார்த்து) இப்படி நான் அவமானப்படும்படிசெய்தது உனக்கு அழகா? இதற்கு நீ தக்க சமாதானம் சொல்லித்தான் தீரவேவேண்டும் — இல்லையானால்—

ஹேஸ்ட்:—ஐயா, அவ்வளவு கண்டிப்பாகச் சமாதானம் கேட்பதானால் இதற்குப் பதிற்சொல்லும்—நான் உன்னிடத்தில் ஒப்புவித்ததொன்றை நீ இன்னொருவர் கையில் கொடுத்துவிட்டது ஒழுங்கோ!

நேவில்லி:—ஐயா ஹேஸ்ட்டிங்ஸ், ஐயா மார்லோ, வீணுக்கு இப்படிச் சண்டையிட்டு என் துன்பத்தை ஏன் அதிகமாக்குகின்றீர்கள்? வேண்டிக்கொள்கின்றேன்—

[வேலையாள் வருகிறான்]

வேலையாள்:—அம்மா அவசரப்படுகிறார். இதோ உங்கள் போர்வை—

நேவில்லி:—வந்துவிட்டேன்.........கோபத்தைத் தணித்துக்கொள்ளுங்கள்.........உங்களை இந்த நிலையில் விட்டுச் செல்வேனானால், கவலையால் நான் செத்துவிடுவேன்.

[இன்னொரு வேலையாள் வருகிறான்]

வேலையாள்:—உங்கள் குடை, விசிறி, எல்லாம் ......குதிரைகள் காத்திருக்கின்றன

நேவில்லி:—ஓ மார்லோ! நான் இப்பொழுது போகிற இடத்தில் என்ன பாடுபடப்போகிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமானால், இந்தக்கோபம் என்மீது இரக்கமாக மாறிவிடும்.

மார்லோ:—என் மனம் படுகின்ற சஞ்சலத்தால் நானிப்பொழுது என்ன செய்கிறேன் என்பதே எனக்குத் தெரியவில்லை. நெவில்லி, என்னை மன்னித்துக்கொள்; ஹேஸ்ட்டிங்ஸ், என்னை மன்னித்துக்கொள். எனக்கு முன்கோபம் உண்டென்பது உனக்குத் தெரியும். அதை நீ தூண்டிவிடலாகாது.

ஹேஸ்ட்:—நான் இப்பொழுது படுகிற அவஸ்தையைக்கருதி நீயும் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும்.

நேவில்லி:—நல்லது, என் அருமை ஹேஸ்ட்டிங்ஸ். நான் எண்ணுகிறபடி நீ என்னிடம் வைத்திருக்கும் நன்மதிப்பு உண்மையானால், மூன்றுவருட காலம் மாறாத அன்புடன் காத்திருப்பதெல்லாம், பின் நாம் சேரும்போது உண்டாகின்றஇன்பத்தைப் பெருக்குமென்பதில் ஐயமில்லை...ஆகையால்—

டோரதி:—(உள்ளிருந்து) நெவில்லி! ஏ நெவில்லி ... நீ இப்படிக் காக்கவைத்தாலும் நினைத்த காரியம் முடியாமற் போய்விடுமென்று எண்ணுகிறாயோ! ... நெவில்லீ, என்ன இது! சீக்கிரம் வா!

நேவில்லி: — இதோ வந்துவிட்டேன். இப்பொழுது அத்தைசொன்ன வார்த்தையை நிச்சயமாக நினைவில் வைத்துக்கொள், ஹேஸ்ட்டிங்ஸ், விடை பெற்றுக்கொள்கிறேன். (போகிறாள்)

ஹேஸ்ட்:—இதயமே, எப்படி நான் இதைத் தாங்குவேன். என்ன இன்பம்! எவ்வளவு சமீபத்தில் இருந்தது! ஐயோ, ஒரு நொடியில் போயிற்றே!

மார்லோ:—(டோனியைப் பார்த்து) ஏ, சிறுவா, உன் முட்டாள்தனத்தின் முடிவை நீயே பார். உனக்கு விளையாட்டாயிருப்பது மற்றவர்களுக்கு எவ்வளவு துன்பத்தைச் செய்கிறதென்பதை, நீயே பார்.

டோனி:—(தூக்கத்திலிருந்து தெளிந்தவன் போல் பாவனை செய்து), அடெ யடெ! பிடித்துவிட்டேன் இதை! இதோ என்கையி லிருக்கிறது! பேஷ் பேஷ்! இரண்டுமணிநேரங் கழித்து இந்தத் தோட்டத்தின் கோடியில் என்னைச் சந்தியுங்கள்; நீங்கள் நினைப்பதைவிட டோனி லம்ப்கின் நிரம்ப நல்லவன் என்பதை நீங்களே தெரிந்துகொள்ளும்படி நான் செய்யாவிட்டால், அப்புறம் என்னை என்ன பேர் வேண்டுமாயினும் வைத்தழையுங்கள். யாரடா அங்கே...

(போகிறார்கள்)

நான்காம் அங்கம் முற்றிற்று.



# பயனின் பயன்

(சிறு கதை)

அவந்திதேசத்தைக் குலராஜவர்மன் என்பவன் ஆண்டிருந்தபோது குடிகளுக்குள் கலகமுங் குழப்பமும் வறுமையும் அதிகமாயின. அதுபற்றிக் கவலை கொண்ட அரசன் தன் மந்திரியை அழைத்து இந்த நிலைமை நீங்குவதற்கு என்னசெய்வது என்று கேட்டான். மாந்திரி, "அரசனே, வறுமைதான் எல்லாப் பாவங்களுக்குங் கலகங்களுக்குங் காரணம்; ஆகையினால், உடனே செல்வத்தைப் பெருக்கிக்கொள்ளக்கூடிய வழிகளைச் சனங்களுக்கு முன்னினு மதிகமாகக் கற்பிக்கவேண்டும்" என்றான். அரசனுமவ்வாறேசெய்தான். ஆயினும், கலகமுங் குழப்பமும் பகையும் பிணியும் பாவச்செயல்களுமே அந்தநாட்டில் முன்னினும் பலமடங்கு அதிகமாயின. வறுமைதான் குறைந்ததோவென்றால், அதுவுமில்லை. வறுமையின் வருத்தம் மாத்திரமல்லாமல் அதன்கொடுமையும் நாளுக்குநாள் பெருகியது. இதனால் கவலை மேலிட்ட குலராஜவர்மன், மந்திரியை அழைத்துக் குறைகூற, அவன் "அரசே, செல்வம் பெருகுவதற்கு நாம் முயல்வதும் கற்பிப்பதும் போதியதில்லை என்பது இதனால் தெரிகின்றது. ஆகையால் இந்தவழியிலேயே நாம் இன்னும் முயலவேண்டியவர்களாக இருக்கின்றோம்" என்னக் கூறினான். இதனை அருகிருந்து கேட்டுக்கொண்டிருந்தாள் அரசன் தேவி. அவள், "இராஜ்யதந்திரிகள் நீங்கள் என்ன நினைத்து என்ன செய்கிறீர்களோ, எனக்குத் தெரியவில்லை. நான் ஒரு பெண்; ஆயினும், என் புத்திக்கு எட்டியதைச் சொல்கின்றேன், கேளுங்கள். செல்வத்தைப் பெருக்க முயலமுயல, குடிகளுக்கிடையே துன்பமும்கொடுமையுமே பரவக்கண்டிருந்தும், இந்த அல்லல் தீர்வதற்கு மீண்டும் அந்த முயற்சியே அதிகமாகவேண்டுமென்பது ஆச்சரியமாயிருக்கிறது. கொடுக்கின்ற மருந்தினால் நோய் அதிகமே ஆவதுகண்டும், அம் மருந்து போதாதென்று பின்னுமதனையே அதிகமாகக் கொடுக்கச்சொல்கின்ற வைத்தியனை நான் எங்குங்கண்டிலேன். தத்துவஉணர்வுடையஉத்தமர்களும் முனிவரர்களும் கலைமிகுந்த புலவர்களும் அமைத்துவைத்த குடிவாழ்க்கை ஒழுங்காக நடக்கின்றவரையில், மந்திரிகளும் தந்திரிகளும் எல்லாம் தங்கள் செயல் என்றுநினைத்துப் பெருமைபேசிக்கொள்வார்கள். அதனோடு நிற்காமல் தங்கள் மந்திரத்தையும் தந்திரத்தையும் அதனுள்ளே புகுத்தவும்தலைப்படுவார். தலைப்பட்டு, அக்குடிவாழ்க்கை கேடடையத்துவக்கியவுடன், திருத்துகின்றேன் பார் என்று அதனைப் பின்னும் அதோகதியாக்கிவிடுவார். ஆகையால், தலைவ, இப்படிப்பட்ட நிலைமைகளில் மந்திரிகளையும் தந்திரிகளையும் தேடாமல், பரம ஞானமுடைய மேலோரைத் துணைகொண்டால்தான் நம் நாட்டிற்கு நற்கதி பிறக்கும்" என்றுகூறினாள். தன் தேவியின் நுண்ணறிவை நன்கு தெரிந்திருந்த அவ்வேந்தன் இம்மொழிகளின் உண்மையை உணர்ந்து, மெய்யறிவுடையமேலோரை நாடியடையும்பொருட்டு யாத்திரை செய்யலானான்.

இப்பாடி யாத்திரை செய்தஅரசன் ஓர் சிற்றூரை அடைந்தபோது, அங்கு அறிவுமிக்க ஆரண உவாத்தியாயர்ஒருவர் வசித்திருந்தாரென்பதைக்கேள்விப்பட்டு, அவரிடஞ்சென்று தன்குறையினை எடுத்துக்கூறி, குடிவாழ்க்கை அமைதியடை தினிது நடைபெறுவதற்குரியவழிகளைத் தனக்குப் போதிக்கும்படிவேண்டினான். அதற்குஅவர், "அரசனே, என்னிடம் பாடங் கற்றுமுதிர்ந்தமாணவர்கள் நால்வர் இருக்கின்றனர்; அவர்களில் ஒருவனைத் தேர்ந்து நான் உன்னுடனே அனுப்புகின்றேன்; அவனை உன்நகரத்திற்கு அழைத்துக்கொண்டுபோய், அவன்சொற்படி செய்வாயானால் நின்நாட்டின் நிலை விரைவில் நேராகிவிடுமென்றுநம்புகின்றேன்" என்றார். அரசனும் ஒவ்வினான்.

அந்த ஆசிரியரிடத்தில் கல்விபயின்ற அம்மாணவர் நால்வரும் பொதுவாகஎல்லாக்கலைகளையுங் கற்றனராயினும், அவர்களில் ஒருவன் சிறப்பாக இலக்கணத்தில் தேர்ச்சி பெற்றான்; இன்னொருவன் இலக்கியத்தில் தேர்ச்சிபெற்றான்; மற்றொருவன் தருக்கத்தில் தேர்ச்சிபெற்றான்; வேறொருவன் வேதாந்த சாத்திரத்தில்தேர்ச்சிபெற்றிருந்தான். இவர்களில் யாரை அரசனுடன் அனுப்பலாமென்று அவ்வாசிரியர்சிந்தித்தார். இலக்கணம் வீண் என்றும் இலக்கியம் வெறும்பொழுதுபோக்கொன்றும் தன் மந்திரி சொல்லக் கேட்டிருக்கின்ற அரசன், புத்தியை நுட்பமாகத் தீட்டித்தருகின்ற தருக்கநூல் வல்லவனை தன்னுடனவந்தால் நலமென்றுநினைத்தான். அல்லது, தன்தேவியின் கருத்துப்படி வேதாந்தசாத்திர நிபுணன் வந்தாலும் வருட்டும் என்றுஇருந்தான். ஆசிரியரோ நெடுநேரம் சிந்தித்துப் பிறகு அரசனைப்பார்த்து, "அரசனே, நான் ஒரு முடிவிற்கு வந்திருக்கின்றேன், ஆயினும் அது நேரோ இல்லையோ என்பதைச் சோதித்துத் தெளிந்துகொண்டபிறகுதான் நிச்சயமாகக்கூடும்; நாளை வா, என் மாணவர்களுக்கிடையே ஒருசிறிய சோதனை அமைக்கின்றேன். அதனை நீயுங் காணலாம்" என்றார். அரசனும் மறுநாள் வருவதாகச்சொல்லி விடைபெற்றுச் சென்றான்.

மறுநாள் குறித்தபடியே மாணவர் நால்வரும் தம் ஆசிரியர்முன் வந்து சேர்ந்தனர். மன்னனும் உடன் இருந்தான். அப்பொழுது ஆசிரியர் அம் மாணவர்களைநோக்கி, "மாணவர்களே, நீங்கள் இந்நாள்வரையில் குறையாத ஊக்கமுடன் கல்விகற்றுத் தேர்ந்தீர்கள். நான் இப்பொழுதுஉங்களை ஒருகேள்விகேட்கப் போகிறேன்; அதற்குத் தக்க விடைதேர்ந்து சொல்லவேண்டும்," என்றுகூறிப் பிறகு அரசனைப் பார்த்து, "அரசனே, இவர்களை என்னகேள்வி நான் இப்பொழுது கேட்க நினைத்திருக்கிறேன் என்பதை உன்னால் கூடுமானால் ஊகித்துச்சொல் பார்ப்போம்" என்றார். உடனே, அரசனும், "உங்களுக்கு அவர்கள் குருதக்ஷிணையாக எவ்வளவு கொடுக்க நினைத்திருக்கிறார்கள் என்று கேட்க நினைத்திருக்கின்றீர்" என்று விரைவிற் பதிற்சொல்லிவிட்டான். அதுகேட்ட அவ்வாசிரியர் 'அன்று' எனப் புன்னகை செய்து, "மாணவர்களே, நான் கேட்கநினைத்திருக்கின்றகேள்வியையே முதலில் நீங்கள் இனி ஊகித்துச்சொல்லுங்கள், பார்ப்போம்" என்றார்.

"கல்வி என்னுஞ் சொல்லுக்கு இலக்கணம் கேட்க நினைத்திருக்கின்றீர்" என்றான் இலக்கண மாணவன். "கல்வியால் என்ன பயன் என்பது உங்கள் கேள்வி"

என்றனன் தருக்கநூல் வல்லவன். வேதாந்தசாத்திர நிபுணன், "மெய்க் கல்வி எதுவென்று ஐய, கேட்க இருக்கின்றீரோ" என்றனன். இலக்கியங்கள் கற்றுத் தேர்ந்த மற்றவன் "ஐயா, உங்கள்கேள்வி யாவதாயிருத்தல்கூடும் என்பது எனக்குத் தெரியவில்லை" என இயம்பிவிட்டான். இவனது விடையைக் கேட்க அரசனுக்குச் சிரிப்பு வந்தது. ஆசிரியர் இந்த இலக்கிய மாணவனை இனிது நோக்கி, "மைந்த, நின்றன் அறியாமை கண்டு நகுகின்றான் அரசன்; கேள்வி இன்னதென்று உன்னால் சிந்திக்க இயலாமற்போனால்போகட்டும்; கேள்வியை நான் கூறியபின், விடையுந்தெரிந்திலை என்னக் கைவிரித்துவிடாமல் ஆழ்ந்து சிந்தித்துச்சொல்" என்றுகூறி, "தருக்கத்தில் தேர்ந்த மாணவன், நான் நினைத்திருந்த கேள்வியைத் தன்னுண்ணறிவினால் ஊகித்துரைத்தனன். ஆம். நீங்கள் இதுவரையிலும் என்னிடம் கற்றுத்தேர்ந்தவைகளால் என்ன பயன் கண்டீர். விரைந்து ஒன்றும் பதில் விளம்பிவிட வேண்டா. நான்கு நாழிகையளவு ஆர அமரச் சிந்தித்துப் பிறகுசொல்லுங்கள்" என்று அவர்களை அனுப்பிவிட்டார்.

சிந்திக்கச்சென்ற மாணவர் திரும்புவதற்கிடையே, ஆசிரியர் தன் அருகிருந்த மன்னவனை நோக்கி, "மன்னவா, இன்னதுபற்றி உன்கருத்தைத் தெரிவி பார்ப்போம்" என்றனர். "நன்மை தீமைகளைத் தெரிந்து கொள்ளவல்ல பகுத்தறிவு வாய்த்ததே யான் கல்வியால் கண்ட பயன்" எனச்செப்பினான் அரசன். ஆசிரியர் அருமையுடன் நகைசெய்து, "ஆயின்நீ அந்தப் பயனின் பயனை அடையவில்லை" என்று இயம்பினார்.

நாழிகை நான்குங் கழிந்தது; மாணவர் சிந்தனை தேங்கிய முகத்துடனே திரும்பி வந்தனர். அவர்களை ஆசிரியர் நோக்கி, "எனது கேள்விக்கு உங்களுடைய விடையை இப்பொழுது தனித்தனி சொல்லுங்கள்" என்றார்.

"எந்த நூலையும் படித்து உணரவல்லேன்; எந்தச் சபையிலும் அஞ்சாமற்பேசவல்லேன்; எல்லார்க்குங் கல்வி போதிக்கவல்லேன்; கற்றவன் என்ற நற்புகழ் எனக்குக் கைவரக் காத்திருக்கின்றது. நான் கண்ட பயன் இது" என்றான் இலக்கணத்தைச் சிறக்கக் கற்ற மாணவன்.

"நிகழ்கின்ற ஒவ்வொன்றிற்கும் காரணம் ஒன்று இருக்கின்றதை உணர்ந்தேன். மீண்டும் அதுவே வேறொரு காரியத்திற்குக் காரணமாயமைவதையும் அறிந்தேன். ஆகையால் எனக்கேனும் பிறர்க்கேனும் நேர்கின்றவைகளைத் தனி நிகழ்ச்சிகளாகவே மயங்காமல் தொடர்புபடுத்தி நோக்குவதால், கண்டனவற்றிற்கெல்லாம் கலங்காமல் என் வாழ்க்கையை நடத்தக்கூடியவனாகஇருக்கின்றேன். இதுவேயான் கண்ட பயன்" என்றனன் தருக்கமுறை தேர்ந்த மாணவன்.

வேதாந்த சாத்திரங்களை விதிமுறை கற்றுத்தேர்ந்திருந்த மாணவன், "இவ்வுலகின் தோற்றத்திற்கும் அத்தோற்றத்திற்குப் பின்னிருக்கும்மெய்ம்மைக்கும் உள்ள வேற்றுமை எனக்குத்தெரியவருகின்றது. நான் கண்ட பயன் இன்னது" என்றனன்.

இலக்கியங்களில் தேர்ச்சிபெற்ற மாணவன் சும்மாவிருந்தனன். ஆசிரியர் அவனைநோக்கி, "மைந்த, உன் விடையை இனி உரை" என்ன அவன், "பெரும, யான் கற்றகல்வியால் கண்ட பயன் யாதென்று தெரிந்திலையே" என்றுகூறி எளிதிருந்தான்.

ஆசிரியர் அரசனை நோக்கி, "மன்னவா, நின் நாட்டை உய்விக்க வல்லவன் இவனே," என்றனன். அரசனும் பணிவுடன் அவனைத் தன்நாட்டிற்கு அழைத்தேகி அவன் உரைத்த வழிகளுக்கு இணங்கி ஒழுகினான். அவன்திருநாடு அல்லல்தீர்ந்து இன்புற அமைதியடைந்தது.

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[446-வது பக்கத் தொடர்ச்சி]

ஊதித் தணிக்கும் நாடகத் திறமை.

வாலியின் வதையானது நம்முடைய இதயத்தில் தூண்டவல்ல துன்பத்தால் நாம் முற்றிலும் அவசமுற்றுப்போகாமல் அதனை ஓரளவு தணிக்கும் பொருட்டுக் கம்பர் வாலியின் வயிர்த்த நெஞ்சினைக் காட்டிவைத்த அக் கொள்கை, டெஸ்டிமோனா தன் முதிய அருமைத்தந்தையைத்தனிவிட்டு வேறோர்காதலனைக் கைப்பற்றி உடன்போகிய செய்தியை அவள் அக் காதலன்றன் அவ்வியத்திற் கிரையாகி வதையுண்டு கிடந்த களத்தினிற் கொணர்ந்து நினைவூட்டிய ஷேக்ஸ்ப்பியரின் நாடகச்சூழ்ச்சியை ஒக்கின்றநீர்மை நனிமிக வியத்தற்குரியது. வாலியின்நிலைமைக்கு நாம் நெஞ்சந் தளர்ந்து சால இளகவும் வேண்டும், இளகிய நெஞ்சம் உருவழிந்து சிதையாமல் சிறிது இறுகவும் வேண்டும். இவ்வண்ணம், ஒரே மூச்சில் வெப்பமுந் தண்மையும் உயிர்க்கின்ற சூழ்ச்சியில் கம்பரும் ஷேக்ஸ்ப்பியரும் வேறோர் இடத்திலும் ஒத்திருப்பதைக் காணலாம். வானரவாலியும் உரோமாபுரி ஜுலியஸ் ஸீஸரும், தம் வீரத்தால் வெற்றியால் தம் உயிருக்கு இறுதிகண்ட நாளின் நிகழ்ச்சியால் பெரும்பாலும் இணையாய் நிற்கின்றனர். அவ் விறுதிநாள் நிகழ்ச்சியைக் கம்பரும் ஷேக்ஸ்ப்பியரும் கையாண்ட வகைகளில் நாடகவேற்றுமை காணலரிது.

வாலி போருக்குப் புறப்படுவதன்முன் அவன்றன் அருமை மனைவி தாரைதடுத்தலும் அவள்சொற்களை விலக்கி இவன் ஏகுதலும் அவனடைகின்றமுடிவின் இரக்கத்தை மிகவுந் தூண்டவல்லன. வான்மீகத்தில் இந்நிகழ்ச்சி யுளது. அதனைக் கம்பர் ஏற்றுக்கொண்டார். ஷேக்ஸ்ப்பியர் எழுதிய "ஜுலியஸ் ஸீஸர்" என்னும் நாடகத்திற்கு முதனூலாயிருந்தது, கிரேக்க நூலாசிரியர் ப்ளூடார்க் என்பவர் ஜுலியஸ் ஸீஸரைப்பற்றி எழுதி வைத்திருந்த ஓர் சரித்திரம். வெல்வதற்கரியவெற்றிகள் பலபெற்றுப் பகைவரனைவரையும் அடக்கித் தன்னொரு சொல்லால் உலகமனைத்தையும் செலுத்தும்படி நின்ற வீரனும் ஜுலியஸ் ஸீஸரின் பெருமைகண்டுபொறாமைகொண்ட சிலர், அவனொடு நட்புடையர்போல்நடித்துப் பொய்யுறவாடி அவனைச் சதிக்கொலைசெய்தொழிக்கச் சூழ்ந்தனர். இதன்படி, ஒருநாள் ஸீஸர் ஸெனட்ஸபையில் தலைமைவகித்து அமர்ந்திருக்கும்போது கரவுடைய தமது கூரிய கத்தினை அவன் மார்பினுட் செலுத்தி வீழ்த்திவிடுவதென்றச்சதியாளர் தம்முள்ளே நிச்சயங்கொண்டிருந்தனர்.



அதற்கு முன்னையஇரவு விண்ணும்மண்ணும் உற்பாதங்கள் பல காட்டின. ஸீஸரின் மனைவி கல்பர்னியா என்பவள் வெருவரு கனவுகள் கண்டாள். ஆதலின், அன்று ஸெனட்சபைக்குப் போகவேண்டாவென்று அவள் ஸீஸரைத் தடுத்தனள். ஸீஸரும் சிறிது அச்சமெய்திப் போகாதிருத்தலே நலமென நினைத்திருந்தபோது சதிக்கொலை சூழ்ந்திருந்த அவ்வஞ்சகர்சிலர் அவன் மனைக்குவந்து, ஸீஸரின் எண்ணத்தைப் பற்பலபேசிக் கலைத்து அவனைத்தம்முடன்ஸெனட்சபைக்கு அழைத்தேகி வதைசெய்துவிட்டனர். ஷேக்ஸ்ப்பியரின் இந்நாடகத்திற்கு முதனூலாகியப்ளூடார்க்கில் இந்நிகழ்ச்சி காணுமாறு இவ்வாறு. கல்பர்னியா தடுத்தாளானாலும், அற்றைநாள் ஸீஸர் ஸெனட்சபைக்குச் செல்லும்படி அவனைத்தூண்டியது, "நான் இதற்கு இணங்கினால் ஸீஸரும் அஞ்சினான் என்று பிறர் எண்ணுவாரன்றோ" என்ற அச்சமேபோல் தோன்றலாகின்றது. ஸீஸரின்கொலையிது சாலத் துன்பவியல் வாய்ந்தது. அதுவும் இச் சதிக்கொலை சூழ்ந்து செய்தவர்களில் தலைவனாயிருந்த ப்ரூட்டஸ்என்பவன், முன்னொருகால் ஸீஸருக்கு விரோதமாகப் போர்செய்து தோற்றும் ஜுலியஸ் ஸீஸர் அவனைக் கொல்லாமல் தன்னுடைய நட்பிற்கு உரியவனாக ஏற்றுக்கொள்ளப் பெற்றவன்என்பதையும், "ப்ரூட்டஸ்உனக்குவிரோதமாகச்சதிசூழ்கின்றான்" என்றுசிலர் அவன்பால்சொன்னபோது ஸீஸர் 'அது செய்யான் என்ப்ரூட்டஸ்" என அவனிடத்து வைத்திருந்த நம்பிக்கையையும், கடையில், ஸெனெட்சபையின்கண் சதியாளர் சிலர் தன்மீது துண்ணென உருவிய வாள்களுடன் பாய்ந்தபோதுதற்காத்துக்கொள்ள முயன்ற ஸீஸர், ப்ரூட்டஸையும் அவ் வஞ்சகர்களுக்கிடையே கண்டவுடன் "சீ! இத்துணை அருமையாய் நான் நம்பியிருந்த ஒரு நண்பன், என் ஆருயிரை வெளவினனென்றால், பிறகு நானதைக் காத்துத்தான் என்னபயன்" என நினைத்தான்போல் தன் முகத்தினைத் துணியால் மூடிக்கொண்டு "நீயுமா, ப்ரூட்டஸ்! ஆயின் ஸீஸரே வீழ்க" என அவன்வாளுக்கு இவ்வீரன் இரையாகக் காத்து நின்றதும், இவையனைத்தும், ப்ளூடார்க்கால் கூறப்பெற்றிருக்கின்ற சரித்திர நிகழ்ச்சிகள். இவை ஸீஸரின்கதிக்கு இரங்கி நம்மை நனிமிகக் கலுழவைக்குந் திறத்தின. ஷேக்ஸ்ப்பியர் இவையனைத்தையும் முதனூலில் உள்ளவாறே ஏற்றுக்கொண்டு தன் நாடகத்தில் அமைத்துவைத்தனர். அதனோடு, ஸீஸர் ஸெனட் சபைக்குச் செல்லும்போது, சதியாளரின் நினைவை எவ்வாறோ தெரிந்துகொண்டிருந்த வொருவன் ஆர்ட்டிமிடோரஸ் என்பவன், ஒரு காகிதத்தில் இச்செய்தியைஎழுதி, ஜுலியஸ்ஸீஸர் அப்பொழுது அச்சதியாளர்களால் சூழப்பெற்றிருந்தானாதலால், தன்னுடைய குறைகளைத் தீர்க்கவேண்டுமென்று கொடுக்கின்ற மனுவைப்போல் "ஸீஸரே, வாழ்க, இப்பத்திரத்தைப் படி'! என்று அவன்கை நீட்டுதலும், அருகே இருந்த சதியாளர்களில் ஒருவனாகிய டெஸ்ஸியஸ் என்பவன், அப்பத்திரத்தில் ஒருகால் தம் சூழ்வினைவரையப்பெற்றிருக்கலாம் என்று அயிர்த்து, ஸீஸர் அதனைப் படிக்காமல் தடுக்கும்வண்ணம் இடைப்புகுந்து, "ஒய்வு நனி யுனக்கு வாய்த்த நேரத்தில் பணிவுடைய தன் விண்ணப்பம் இதனைநீ படித்துப்பார்க்குமாறு ட்ரெபோனியஸ் விழைகின்றான்" என்று தானுமொரு பத்திரத்தை நீட்டி ஸீஸரினது கவனத்தைக் கலைக்க முயன்றான். அப்பொழுது—

ஆர்ட்டிமிடோரஸ்:—ஓ ஸீஸர், எனதை முதலிற் படி; ஏனெனில், ஸீஸரை அண்மிப்பற்றிய விண்ணப்பம் எனது; பெரியோய் ஸீஸரே, இதனைப் படி.

ஸீஸர்:—நம்மையே பற்றியது கடைமுறையே கருதப்படும்.

ஆர்ட்டி:—ஸீஸரே, தாழற்க, இப்பொழுதே படி இதனை.

ஸீஸர்:—என்ன! பித்தனோ இந்தப் பயல்.

எனப் பகர்ந்து அந்தப் பத்திரத்தை ஓதாமலே ஸெனட்ஸபைக்குச் சென்று ஸீஸர் கொலையுண்டு வீழ்ந்தான் என்று ஷேக்ஸ்ப்பியர் ஒரு சிறு நிகழ்ச்சியைக் கற்பனை செய்தமைத்திருக்கும் இது, ஸீஸரின் வீழ்ச்சியால் சுரக்கின்ற இரக்கத்தைப் பின்னும் பலபடி பெருக்கவல்லது.

இத்துணை தூரம் ஸீஸரின் முடிவில் அடங்கிய துன்பத்தை உயர்த்துகின்ற ஷேக்ஸ்ப்பியர், புண்படுகின்ற நம்மனம், அத்துன்பத்தால் தூய்மையடையும்படி பண்பட்டிருக்கும் பொருட்டுச் செய்திருக்கின்ற ஒருசூழ்ச்சியை, ஸீஸரை அவன்மனைவி தடைசெய்த காட்சியில் காணலாம்—

கல்பர்னியா:—யாது கருதுகின்றனை, ஸீஸர்? வெளிச்செல்ல நினைக்கின்றாயோ? உன் வீட்டைவிட்டு நீ இன்றைக்கு அசையப்படாது.

ஸீஸர்:—ஸீஸர் போகத்தான் போவான். என்னைப் பயமுறுத்தியவை என் முதுகையன்றி யொருபோதும் பார்த்ததில்லையே. ஸீஸரின்முகத்தினைப் பார்த்தவுடன் அவை மறைந்தொழிந்துவிட்டன......

...பயம்பற்றி இன்றைத்தினம் மனையகத்தேதங்குவானாயின் ஸீஸர் ஒரு இதயமற்ற விலங்கேயாயிருத்தல் வேண்டும். இல்லை, ஸீஸரோ மாட்டான். தன்னிலும் ஆபத்து அதிகம்செய்பவன் ஸீஸரென்பதைஆபத்தே நன்கு அறியும். ஒரே நாளிற் பிறந்த இரண்டு சிங்கங்கள் நாங்கள்; மூத்தவனும் வீமம் மிகுந்தவனும் யான்— ஸீஸர் வெளிச்செல்வான்.

கல்பர்னியா:—ஐயகோ, என் தலைவ, உனதறிவு உறுதியிற் றின்று தீர்கின்றது. இன்றைத்தினம் புறத்தே போகற்க......

ஸீஸரின் அறிவு அவன் உறுதியில் தின்று தீர்கின்ற இது, முதனூலாகிய ப்ளூட்டார்க்கில் இல்லாமல் ஷேக்ஸ்ப்பியரால் கற்பனைசெய்து காட்டப்பெற்றது. எவ்வளவுதான் ஒருவன் வீரனாயிருப்பினும், அவன் தானே தன்னுடைய தறுகண் ஆண்மையை மிக விளம்பிப் பரக்கப்பேசுவது ஓரளவு, அவன்பால் வைத்த நன்மதிப்பைச் சிறுகவே செய்யுந் தன்மையதென்பதில் ஐயமில்லை. இவ்வாறு அதனை இச்செவ்வியில் குறைத்துக் காட்டவேண்டுமென்பதே ஷேக்ஸ்ப்பியரின் நோக்கம். ஆயினும்இவ்வொன்று கொண்டு, வதையுண்டு மடிவதற்கே உரியவோர் சிறியன் என்று ஒருவரும், ஸீஸரை வெறுத்து இகழவும் மாட்டார். எனின், இகழ்ச்சிக்கே இடமாயில்லாமலும், அவன் உற்றகதினுயிக்கு இரங்குகின்றமனத்தினைச்சிறிதளவு தணித்தும் வைத்து, ஸீஸரின் வீழ்ச்சியாகின்ற அத்துன்பியல்நாடகத்தின் இலக்கணத்தை ஷேக்ஸ்ப்பியர்

நன்கு காத்தார். ஒருவன் தனதுஆண்மையைப் பகைவனிடங் கூறிவீரவாதஞ்செய்வது போர்முறையிற் பாராட்டற் குரியதே. அயலாரிடத்து அது செய்வது வீரமன்று, விதியுமன்று; தகவிலாத்தற்புகழ்ச்சியேயாகும். எனினும், ஒருவன் தன்னொருநன் மனையாளிடம் அன்னவை நவில்வானாயின், தகவு சிறிது மில்லாத வீண்பெருமிதம் என்னும் இகழ்ச்சி பெரும்பாலும் கழிந்துவிடும். இத்துணையும் மனத்தில்வைத்து ஷேக்ஸ்ப்பியர், ப்ளூட்டார்க்கினல் சொல்லப்படாததொன்றைச் சேர்த்துக்கொண்டு தன் நாடகத்தின் காட்சியைச் சிறிது மாற்றிக் காட்டினர்.

வால்மீகி முனிவரின் வரலாற்றைக் கம்பர் கைக்கொண்ட தன்மையும் இன்னதே யாகி நிற்கின்றது. "ஒன்றற்கு அஞ்சி நான் எஞ்சினவன்போல் நிற்பேனே" என்ற எண்ணமுடன், நிமித்தங்கள் பல நேர்ந்தனவற்றைக் காட்டித்தடுக்கும் அக் கல்பர்னியாவை விலக்கி (ப்ளூட்டார்க்கின் வரலாற்றின் படி) வெளியேகிய ஸீஸரைப் போலவே, வால்மீகரது வாலியும், "மாதே, என் தம்பியும் சத்துருவுமான சுக்கிரீவன் இவ்வாறு உறுமிக் கர்ச்சிக்க நான் அதைக் கேட்டு எப்படிப் பொறுத்திருப்பேன்...... பயந்தவளே..., என்னோடு போர்புரிய விரும்பிச் சுக்கிரீவன் இடும் பூசலை நான் சகிக்கமாட்டேன்" என்றதோடு நிறுத்திவிட்டான். மற்று, இன்னதோர் நிலையில் ஷேக்ஸ்ப்பியரின் ஸீஸர், ஆபத்திற்கும்தான் ஆபத்தாயிருந்தவன் என்றது அனைய பெருமிதச் சொற்களைப் பேசியவாறே, கம்பரின் வாலியும், மூன்றுலகமும் தனக்கு நேரெனத்தோன்றினும் தோற்று அவை தொலையுமென்றும், கூற்றுந் தன் பெயர்சொலக் குலையு மென்றும், தேவரும் அசுரரும் கூடிக் கடையமாட்டால் எளிது கிடக்கப்பாற்கடல்கடைந்து அவருக்கு அமுதந்தந்தவன் தானென்றும் விளம்பக்காண்கின்றோம். இன்னவாறு முதனூலிலில்லாததை, ஷேக்ஸ்ப்பியரும் கம்பரும் ஒரேவகையில் கற்பனைசெய்து தம் நாடகத்தில் சேர்த்துத் தன்பியல் நிகழ்ச்சியின் பயனை நல்குகின்றனர்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[376-வது பக்கத் தொடர்ச்சி]

### (iii) அப்பர் பதிகங்களில் சேகரிக்கக் கூடிய இராமாயண விஷயங்கள்.

### (b) இராவணன் நற்குணம்

இராவணன் அழகிற் சிறந்தவனென்பதை முன்னரே, கண்டோம். அவன்குரல் மிகவும்இனிமையானது. அவன் கீதத்தைக் கன்னலுக் கொப்பிடுவர் அப்பர்:—

தென்னவன் மலையெடுக்கச்சேயிழைநடுங்கக்கண்டு
மன்னவன்விரலா லூன்றமணிமுடிநெரியவாயால்
கன்னலின்கீதம்பாடக்கேட்டவர்காஞ்சிதன்னுள்
இன்னவற்கருளிச்செய்தாரிலங்குமேற்றளியனாரே

திருக்காஞ்சி திருமேற்றளி - திருநேரிசை 10.

இராவணன் கல்விக்கடலைக் கரைகண்டவன். அவன் பெற்ற கல்வியும், கேள்வியும் உலக அநுபவமும் யாவரும் பெற்றதில்லை. அவன் பராக்கிரமும் கல்வியுமொரேவிதமாயிருந்ததால் உடல்வலிவுந் தலைநிறைவும்ஒன்றேயாம். சம்பந்தர் இவனைக்குறிக்குமிடத்து,

"கடலெனநிற நெடுமுடியவ
னடுதிறல்தெற வடிசரணென
அடல்நிறைபடை யருளியபுக
ழரவரையினன் அணிகிளர்பிறை
விடம்நிறைமிட றுடையவன்விரி
சடையவன்விடை யுடையவனுமை
உடனுறைபதி கடன்மறுகுடை
யுயர்கழுமல வியனகரதே"

சம்பந்தர்-திருக்கழுமலம்-திருவிராகம்-8.

குபேரனை வெற்றிகொண்டு புட்பகம் கவர்ந்ததும் இந்திரனை வென்றதும், * இவன் திக்கு விஜயத்தில் பெற்ற பெருமைகளாம். அக்காலத்திய உலகத்தில் கார்த்தவீரியார்ச்சுனனும் வாலியும் ஆகிய இருவரே இவனை வெல்லக்கூடிய சக்தி வாய்ந்தவராயிருந்தனர். அஷ்ட திக்ஜங்களின் கொம்புகள் இவன் மார்புறப் புதைந்து ஒரு அணிகலமாய் விளங்கியதென்றக்கால் போர்க்களத்தினுள் இவன் மிகவும் பொறுமை வாய்ந்தவனென்றும் நாம் கொள்ளக்கூடும்.

பொருதலங்கல் நீண்முடியான் போரரக்கன்
புட்பகந்தான் பொருப்பின்மீ தோடா தாக
இருநிலங்கள் நடுக்கெய்த எடுத்திடுதலும் [கிச்
ஏந்திழையாள் தான்வெருவ இறைவன் நோக்
காதலங்கள் கதிர்முடியா றஞ்சி னோடு
கால்விரலாலூன்று கழிப்பாலையார்
வருதலங்க மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே.

—திருக்கழிப்பாலை - திருத்தாண்டகம் 10.

உமாதேவியாரே இராவணனது செய்கைக்கு அஞ்சினரெனில், அவன் வன்மையும் தன்மையும் சாதாரணமானவைகளென்று எண்ணக்கூடியவோ. அவன் துன்மார்க்கத்தினால்மட்டுமே அவ்வாறு செய்தானென வெண்ணலாகாது. 'நகழுமால் வரைக்கீழிட்டரக்கர்கோனை நலனழித்து நன்கருளிச் செய்தான் தன்னை" என்னும் அப்பர் திருவாக்கை நோக்கும்போது இராவணனிடத்தில் கெம்பீரமான புருட தருமங்களும் அமைந்திருந்தனவென் றெண்ணலாகும். இதற்குச் சான்று: வால்மீகி இராமாயணத்தில் சுந்தரகாண்டத்தில், இராவணன் அந்தப்புரமும், அரசாட்சி முதலியனவும் நோக்குவோமாகில், அவன் நடவடிக்கைகளும் நற்குணமும் வியக்கத்தக்கனவேயாம்.

இவன் பத்துத் தலையினனாயினும் அழகில் சிறந்தவனென்பது இராமாயணத்தால் வெளியாகும். அவன் மனைவியர் பலர் அவனைத் தம்முயிர்போல் எண்ணினரெனில், அன்னோர் இல்வாழ்க்கை மிக்க மேன்மையதென்பதே வெளிப்படை. இராவணன் வதைப்படலத்தில், அவன் மாண்ட பின்னர் அவன் மனைவியர் வருந்துவதின்காரணம் பின்வருமாறு கம்பனால் கூறப்பட்டுள்ளது காண்க:—

வருத்தமே தெனினது புலவி வைகலும்
பொருத்தமே வாழ்வெனப் பொழுது போக்குவார்
ஒருத்தார்மே லொருத்தர்வீழ்ந் துயிரிற் புல்லினார்
திருத்தமே யெனவவன் சிகரத் தோள்கண்மேல்

இம்மனைவியர் பல வகுப்பினரென்றும், அவர் யாவரும் இராவணனிடத்தில் ஒரேதன்மையதாகிய அன்பு பூண்டிருந்தாரென்றுங் கம்பர் காட்டுவார்:—

இயக்கிய ராக்கிய ருரக ரேழையர்
மயக்கலில் சித்தியர் விஞ்சை மங்கையர்
முயக்கினர் முறைகெட முயங்கி னார்கடந்
துயக்கிலா வன்புமன் டெவருஞ் சோரவே

* இமையவரஞ்சியோடவெதிர்வாரவர்தம்மையின்றி
யமைதருவல்லரக்கனடர்த்துமலையன்றெடுப்பக் [திட்
குமையதுசெய்துபாடக்கொற்றவாளோடுநாள்கொடுத்
துமையொடிருந்தபிரான்பிரமபுரமுன்னுமினே.
சம்பந்தர்—திருப்பிரமபுரம். பண்-பஞ்சமம் 8.



இவன் மூத்த மனைவியாகிய மண்டோதரி இராவணனுடைய களேபரத்தைக்கண்ணுற்றுப் பிரலாபித்து அதன்மீது விழுந்து தன் உயிரை நீத்தாளென்று கம்பராமாயணம் கூறும். வால்மீகி அவள் இறந்ததாகச் சொல்லவில்லை. ஆயினும் கம்பன், வாலியின் மனைவி தாரைக்குப் பதிவிரதா தன்மை தந்ததுபோல், இவளையும் பரம சதியாக்கிப் போர்க்களத்தில் கணவன் உடல்மேல் இறக்கச்செய்தனன். இவ்வாறு குணத்தைஉயர்த்திக் காட்டுவது (Idealisation of character) கவிராசருக்குள்ள உரிமையாயினும் மனைவியின் குணத்தை யுயர்த்தியதுபோலவே கணவன் குணத்தையும் உயர்த்திக் காட்டுவது கலையின் சிறப்பாகும். கம்பராமாயணத்தில் நாம், வால்மீகியால் காட்டப்படும் இராவணனைச் சற்றுக் கறுத்த ஒளியிலே காண்கின்றோம்.

இலங்கையில் இவனை விரும்பி அன்பு பாராட்டாதவர் இலர். விபீடணனும் இராவணனை,

"எந்தைநீ யாயுநீ யெம்மு னீதவம்
வந்தனைத் தெய்வநீ மற்று முற்றுநீ"

எனக் கூறுவனாயின், ஏனையோர் எவ்வாறுஇராவணனைப் பாராட்டுவா ரென்பது யாவரும் அறியக் கூடியதே. இராவணன்செய்த அரசாட்சி அரக்கர்முறையில் செங்கோலேயாகும். அரக்கராகிய தன் குடிகளுக்கு வேண்டிய பாதுகாப்பும் சுகமுந்தந்தனன். குடிகளைத் தன் குழந்தைகளைப்போல் எண்ணிய இவனைக் குடிகளும் தந்தையைப்போல் எண்ணி மதித்து வழிபட்டனர். இவனைத் "தன்னியல் தசமுகன்" என்று புகலிவேந்தர் கூறுவார். திருநல்லூர்த் திருப்பதிகத்தில், "ஏறுபுகழ் பெற்ற தென்னி லங்கையவர் கோனை யருவரையில் சிறியவனுக் கருளு மெங்கள் சிவலோகன்" என்று பரமனைப் பாடுகின்றார். மற்றும் இராவணன பெருமையைக் காட்டுகிற பின்வரும் பாசுரத்தையுங் காண்க:—

ஒருவரையும் மேல்வலிகொ டேனென
வெழுந்த விறலோனிப்
பொருவரையின் மேலொர் பெருமானு
முளனோ வெனவெகுண்ட
கருவரையு மாழ்கடலு மன்ன திறல்
கைகளுடை யோனை
யருவரையி லூன்றியடர்த் தானுறைவ
தவளிவணல் லூரே

சம்பந்தர் - திருவவளிவணல்லூர்—
திருவிராகம் - பண், சாதாரி. 8,

இராவணன் ஒப்பற்ற கீர்த்தியும் வலிமையும்உள்ளவன். ஆகையால் அக்காலத்தில் அவன் ஆட்சிக்குத் தேவலோகமு முட்பட்டதெனின், அவன் குடிகளாகிய அரக்கர்களுக்குச் சிற்றுணவாகும் மனிதரை ஒரு பொருளாய் அவன் பாவிக்கவேண்டியது இல்லையே. இராமன் தேவியை அவன் கவர்ந்தது மாத்திரமன்றி, அவ்வன்னை உலகமாதாவாதலால் அத்தகைய பதிவிரதைக்கு இன்னல் விளைவித்தவனென்னும் கெட்ட அபிப்பிராயமாகிய கருவொளியால் நாம் அவனைக் காண்பதைவிட்டு, இராமாயணத்திற்கு முன்னிருந்த நிலையில் நாம் இராவணனைக் காண்போமாயின், அவனிடம் துவேஷமோ கொள்ள நேராது. தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் உள்ளபகை நெடுங்காலத்திய தீராப்பகையாதலால், அசுரர் ஆக்கம் தேவர்களுக்குப் பொறுக்கமுடியாமலிருந்தது தொன்றுதொட்டு வந்த குணமேயாகும். இரணியனது மகனான பிரகலாதன் ஆட்சி செய்தபோதுமாத்திரம் விஷ்ணுவிடம் தேவர்கள் முறையிடவில்லை. முறையிட்டாலு மது பயனற்ற காரியமாகுமென்பதைத் தேவர்களறிந்தே அரக்கரின் மீது படையெடுக்க அவர்கள் துணியவில்லை. அவன் பேரனான மாவலி உலகத்தவருக்கும் தேவர்களுக்கும் யாதொரு தீங்கு செய்யாதிருந்தும், அவனை யொழிப்பதற்குத் தேவர்கள் முறையிடவே விஷ்ணு வாமனவதாரம் செய்தார். மாவலியின் வழிவந்த இராவணனும் சீதையைக் கவராவிடில், மாவலியைப் போன்ற ஒரு சிறந்த அரசனாகவே நம்மவரால் கொண்டாடப்படுவானன்றோ?

இலங்கை நகரிலுள்ள மன்னுயிரைத் தன்னுயிரேபோல் இராவணன் எண்ணியிருந்தனனென்பதற்குக் கம்பராமாயணத்திலும் சான்றுகள் உள. அநுமான் வைத்த தீயால் இலங்கைக்கும் தனக்கும் வந்த பழியையும் துன்பத்தையும்இராவணன் எவ்வாறுகொள்கின்றானென்பதைப் பின்வரும்செய்யுள்களால் அறியலாம்:—

தாட்சியிங் கிதனின்மேற் றருவ தென்னினி
மாட்சியோர் குரங்கினா லழிந்த மாநகர்
ஆட்சியு மமைவு மென்னரசு நன்றெனாச்
சூட்சியின் கிழவரை நோக்கிச் சொல்லினான்

சுட்டது குரங்கெரி சூறை யாடிடக்
கெட்டது கொடிநகர் கிளையு நண்பரும்
பட்டனர் பரிபவம் பரந்த தெங்கணும்
இட்டதிவ் வரியணை யிருந்த தென்னுடல்!

—மந்திரப் படலம் - 11—12

இவ்வாறு பகர்ந்த இலங்கை யரையனைக் கொடியோனென்று நாம் கூறலாகுமோ? இவனைச்சீலமுடையவனென்றும், * கோல முடையவனென்றும், யாதொரு குறைவு மில்லாதவனென்றும், எல்லாச் செல்வமும் இன்பமும் பெற்றது இலங்கை யென்றும் குறிப்பிடும் பதிகங்கள் அப்பர் தேவாரத்திலு முள.

ஆகையால் இராவணன் கொடூரமே வடிவெடுத்தவனென்று எண்ணலாகாது. இவன் குணத்தில் பெரும் பாகம் வியக்கத்தக்கதும் மேன்மையானதுமாயிருக்கின்றது. கல்வி, செல்வம், வலிவு, நற்குணம்முதலியன வமைந்தோன் குற்றம்செய்வானாயின், அதனை மிகவு மதிகமாய் எடுத்துக் காட்டல் உலக வியல்பாம்.

* மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமூன்று மெய்தாய் போற்றிச்
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றிச்
சிலையெடுக்க வாயலற வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் றன்னை யன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் காய்த்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.
ஸ்ரீகைலாயம் - போற்றித் திருத்தாண்டகம் 10.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளீவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
மடச்யாவனப்ராசா
மடபிருங்காமலக.தைலம்
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணை-பாக்கேட்
I.D.L. 61, மெடிகேடட்-டப்பி
கோரோஜனை மாத்திரை
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
மட.ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்
[பண்டங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

m211, N2IKN
N34:2:29
199179

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

நீராடச் சென்ற விடத்தில் நின்ற பேய்:—வங்காளத்தில் சிலிகுரிபட்டணத்துக்கு மூன்றுமைல் தூரத்திலுள்ள தேயிலைத்தோட்டத்தில் வேலைசெய்துவரும் ஒரு வாலிபப் பெண் ஒருநாள் நடுமத்தியான வேளையில் ஆற்றில் குளிக்கச் சென்றாள். ஜலத்தில் அவள் மூழ்கி எழுந்தபோது அவளுக்கு எதிரே ஒரு உருவம் தோன்றியதாம். உடனே அவள் 'ஐயோ! என்னைக் காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள். அவள் இழுத்துக்கொண்டு போகிறாள்' என்று கூச்சலிட்டாள். பக்கத்திலிருந்தவர்கள் இக் கூக்குரலைக்கேட்டு ஓடி வந்து பார்க்க அவள் பிரக்ஞை தவறிக் கரையில் விழுந்துகிடந்தாள். அடடே அவளை வீட்டுக்கு எடுத்துச் சென்றார்கள். தேயிலைத்தோட்ட டாக்டர் தம்மாலானவரை சிகிச்சைசெய்தும் மூர்ச்சை தெளியவில்லை. அதன்மேல் அப்பெண்ணின் உறவினர் பூஜாரியை அங்கு அழைத்துவந்து மந்திரம்செய்ய ஏற்பாடு செய்தனர். பூஜாரி வந்து அந்தப்பெண்ணைத் தொட்டதும் அப்பெண் மூர்ச்சை தெளிந்து எழுந்து 'ஓஹோ சரி,நீங்கள் ஏன் வந்தீர்கள்' என்று பூஜாரியைக் கேட்டது.

பூஜாரி:—நீ யார்?

பெண்:—நான் சோமா என்பவரின் மனைவி. கர்ப்பமாக இருக்கையில் இறந்துபோனேன்.

பூஜாரி:—நீ ஏன் இந்தப் பெண்ணைப் பிடித்துக் கொண்டாய்?

பெண்:—இந்தப் பெண் என்னைப் பார்த்துச் சிரித்துப் பரிகாசம் செய்தாள்.

பூஜாரி:—அவளை விட்டுப் போகமாட்டாயா?

பெண்:—போகமாட்டேன்.

அதன்மேல் பூஜாரி மந்திரம் ஜெபிக்க ஆரம்பித்தார். பெண் அழத் தொடங்கினாள். பூஜாரி விளக்குமாற்றால் அடிக்கக் கையை ஓங்கியபோது அப்பெண் 'சற்றுப் பொறுங்கள் நான் விட்டுவிட்டுப் போகின்றேன்' என்றாள். 'என்னால் பொறுத்திருக்கமுடியாது, உடனே ஓடிப்போ' என்று சொல்லிப் பூஜாரி ஓங்கி ஒரு அடி கொடுத்தார். 'நான் போகிறேன் நான் போகிறேன்' என்று கூவிக்கொண்டே போய்விட்டது. பெண் மீண்டும் மூர்ச்சையானாள். பிறகு டார்க்டர் சிகிச்சை செய்ய அவள் பிரக்ஞை பெற்றுக் குணமடைந்தாள். இப்போது சுகமாக வாழ்ந்து வருகிறாள்.

* * *

ஆனைமுகப் பிள்ளை:—உதகமண்டலத்திற்கு ஐந்து மைல் தூரத்திலுள்ள கொராட்டா என்னும் கிராமத்தில் படுகர் வகுப்பைச் சேர்ந்த ஜோகிகவுடர் மனைவி செவளியம்மாள் ஒரு விசித்திமான ஆண் குழந்தையைப் பிரசவித்தாள். அக்குழந்தையின் முகம் யானை முகமாயும் ஓர் துதிக்கையும் இரண்டு தந்தக் கொம்பும் இருப்பதால் விநாயகர் போன்று இருக்கிறது. மனிதருக்கு உள்ள கால் இரண்டும் கை இரண்டும் இருக்கின்றன. தாயும்குழந்தையும்சௌக்கியமாகவே இருக்கின்றனர். குழந்தை தாய்ப்பால் சாப்பிடுவதில்லை. பசும்பால் காய்ச்சிக் கரண்டியில் ஊற்றினால் மட்டும் சாப்பிடுகிறது. ஆறு நாள் குழந்தை ஏழுமாதக் குழந்தைபோன் றிருக்கிறது. ஆங்கிலேயர்களுள்படத் திரள் திரளாய்ச் சுற்றுப் பக்கக் கிராமத்துஜனங்கள் வந்து பார்த்துக்கொண்டு போகின்றார்கள். இரவில் விளக்கில்லாமல் குழந்தை தூங்குவதில்லையாம். குழந்தையின் தகப்பனும் தாயும் குழந்தையைப் பார்க்க வரும் ஏராளமான சகோதரசகோதரிகளுக்குப் பதில் சொல்வதில் திக்பிரமை கொண்டுவிட்டார்கள். இரவில் குழந்தை கத்தும்போது புல்லாங்குழல் வாசிப்பது போன்ற சத்தம் வருகின்றதாம்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., Managers.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஆம் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷ்யூரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 58வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! இனும்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)